Registered as a news paper.

பக்கங்கள்: பத்து

விலை: ரூபா 6.00

நமது

# ஈழநாடு

தமிழர் தாயகத்தின் முன்னோடி நாளிதழ்

மலர் : 01 திருவள்ளுவர் ஆண்டு: 2034 வைகாசி 11 ஆம் நாள், ஹிஜ்ரி 1425 ர.அவ்வல் 22 (25.05.2003) ஞாயிற்றுக்கிழமை இதழ் : 233

**Internet Browsing @**
**Secote information Technologies**
(near the parameswara junction)
யாழ். நகரில்...
குறைந்த கட்டணத்தில் அனைத்து கணனிசார் வேலைகளையும் பெற்றுக்கொள்ள சிறந்த இடம்,
- அதிவேக PENTIUM 4 கணனி மூலம்
- இணை சேவை (Internet Browsing)
- இன்ரநெற் போன் நிமிடத்துக்கு 10/- (கனடா, அமெரிக்கா, ஐரோப்பிய நாடுகள்)
- Computer printing 1Page 10/-
- Cd Writing 50/- (Computer Type seting)
- Floppy disc, CD என்பன பெற்றுக்கொள்ளலாம்.
- Computer Type Setting
(354)

# இடைக்கால நிர்வாகசபைக் கோரிக்கை; ஜனாதிபதி சந்திரிகாவினால் நிராகரிப்பு!

## ரணில் முறையற்ற வகையில் நடப்பதாகவும் குற்றச்சாட்டு

(கொழும்பு)

**தமிழீழ விடுதலைப் புலிகளின் இடைக்கால நிர்வாகசபைக் கோரிக்கையை, ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க நிராகரித்துள்ளார்.**

**விடுதலைப் புலிகள் இயக்கத்துடன், அரசாங்கம் தொழில்சார் தகைமையற்ற வகையில் இணக்கப்பாட்டுக்கு வரமுயல்வதாகவும் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க குற்றஞ்சாட்டியுள்ளார்.**



கொழும்பிலுள்ள வெளிநாட்டுச் செய்தியாளர்களுடன், நேற்றுமுன்தினம் இரவுணவு வேளையில் உரையாடியபோது, ஜனாதிபதி சந்திரிகா இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து தெரிவிக்கையில் - இறையாண்மையை மதிக்கும் எந்தவொரு நாட்டிலும், எவரோ ஒருவரின் வேண்டுகோளுக்காக - அரசியல் யாப்புக்குப் புறம்பாக -அரசாங்கம் செயற்பட்டதாக - ஒருபோதும் நான் கேள்விப்படவில்லை.

இத்தகைய கோரிக்கைகளை, பைத்தியக்காரத்தனமாக அரசாங்கம் கவனத்திலெடுக்க வேண்டுமென நினைத்தால், அவ்வாறு நினைப்பவர்கள்தான் பைத்தியக்காரர்களாவர்.

கொடூரமான - ஒரு சார்புடன் நடந்துகொள்ளும் உயர் நிர்வாகத்துக்குட்பட்ட அமைப்புடன், கலந்துரையாடல்களை நடத்துவது பொருத்தமற்றது.

புலிகள் - பயங்கரவாதத்தையும், தனிநாட்டுக் கோரிக்கையையும் கைவிட்டால், ஜன்நாயக ரீதியில் இணக்கப்பாட்டுக்கு வரமுடியும்.

தற்போதைய அரசாங்கத்தைப் பதவிநீக்கும் யோசனை எதுவும், தற்போது கிடையாது எனினும், நாட்டின் இறைமைக்கு அச்சுறுத்தல்

(10 ஆம் பக்கம் பார்க்க)

## புலிகளுக்கு அரசாங்கம் உரிய பதில் தரவேண்டும்!

### நோர்வே தூதரக அதிகாரிகள் கோரிக்கை

(கொழும்பு)

ஜப்பானில் நடைபெறவிருக்கும் உதவி வழங்கும் மாநாட்டில், பங்கு பற்றுவது தொடர்பான விடுதலைப் புலிகளின் கோரிக்கைக்கு, இலங்கை அரசாங்கமே உரியபதில் வழங்கவேண்டும். - இவ்வாறு இலங்கைக்கான நோர்வேத் தூதரக அதிகாரிகள் தெரிவித்தனர்.

வட - கிழக்கில் அபிவிருத்தி மற்றும் புனர்வாழ்வு நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு வசதியாக, இடைக்கால நிர்வாக சபை என்ற அதிகாரக் கட்டமைப்பு ஏற்படுத்தப்படவேண்டும் என்று, விடுதலைப்புலிகள் கோருவதில் ஆச்சரியப்படுவதற்கு எதுவும் இல்லை. இதற்கு அரசுதான் உரிய வகையில் அவர்களுக்குப் பதில் வழங்வேண்டும். மேற்படி விடயத்திற்காக சமாதான முயற்சிகள் பயனற்றுப்போகக்கூடாது. சமாதானப் பேச்சுக்களை மீண்டும் ஆரம்பிப்பதற்கு, நாம் நமது பூரண ஒத்துழைப்பை வழங்குவதற்கு "எப்போதும் தயாராக இருக்கிறோம் என்றும் நோர்வேத் தூதரக அதிகாரிகள் மேலும் தெரிவித்தனர்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்களுடனான சந்திப்பின்போதே மேற்படி விடயம் தெரிவிக்கப்பட்டது.

## வொஷிங்ரனை விட ரோக்கியோ மாநாடே மிகவும் முக்கியமானது!

### ஐரோப்பிய யூனியன் பிரதிநிதி கூறுகின்றார்

(யாழ்ப்பாணம்)

வொஷிங்ரனில் நடைபெற்ற மாநாடானது ஒரு கருத்தரங்கு மட்டுமே. உலகிலுள்ள உதவி வழங்கும் நாடுகள் மற்றும் அமைப்புக்களின் கவனத்தை இலங்கை மீது

பிய யூனியன் பிரதிநிதி வூல்டர் வில்ரன் தெரிவித்தார்.

யாழ்.குடாநாட்டின் தற்போதைய நிலைமை தொடர்பாகத் தனது மதிப்பீடுகளைச் செய்யவும், நிலைமைகளை ஆராய்ந்து, ரோக்கியோ



## புலிகளிடம் இடைக்கால சபை; இன்றும் இதையே கேட்கிறோம்!

### யாழ். வந்த வாசுதேவ தெரிவிப்பு



'சமாதானத்துக்காக நாங்கள் செல்லும் பாதை, மிகவும் கரடுமுரடானது.

# புலிகளிடம் இடைக்கால சபை; இன்றும் இதையே கேட்கிறோம்!

## யாழ். வந்த வாசுதேவ தெரிவிப்பு



'சமாதானத்துக்காக நாங்கள் செல்லும் பாதை, மிகவும் கரடுமுரடானது. இப்பாதையில் சில சமயங்கள் பின்னடைவுகள் ஏற்படலாம், மீண்டும் முன்னேற்றமடையலாம். இடைக்கால நிர்வாகசபையை விடுதலைப் புலிகளிடம் வழங்க வேண்டுமென்று, நாம் அன்றைக்கும் கூறினோம், இன்றைக்கும் அதைத்தான் கூறுகின்றோம்' -இவ்வாறு ஜனநாயக இடதுசாரி முன்னணியின் தேசிய இணைப்பாளர் வாசுதேவ நாணயக்கார தெரிவித்தார்.

பாதுகாப்பு, சமாதானம் தொடர்பான கூட்டு முயற்சிக்கான உபாயங்கள் என்னும் தொனிப்பொருளில், நேற்று யாழ். பல்கலைக்கழகத்தில் நடைபெற்ற கருத்தரங்கின் முடிவில் (10 ஆம் பக்கம் பார்க்க)

### இடைக்கால நிர்வாகம் தொடர்பான

# அரசியல் குழு கூட்டத்தின் பின் பிரதமர் ரணிலின் பதில் கடிதம்

ஐக்கிய தேசியக் கட்சியின் - அரசியல் விவகாரக் குழுவின், இன்றைய கூட்டத்தின்பின்பு, இடைக்கால நிர்வாக சபை குறித்த பிரதமரின் பதில், விடுதலைப் புலிகளுக்கு அனுப்பிவைக்கப்படவுள்ளது.

அநேகமாக - இந்த வாரத்திற்குள் பிரதமரின் பதில் கடிதம் அனுப்பி வைக்கப்படலாம் என்று கொழும்புத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

பிரதமரின் பதில் - புலிகளின் இடைக்கால நிர்வாகம் தொடர்பான கோரிக்கைக்குச் சாதகமாக இருக்கலாம் என, கொழும்பில் அவருக்கு நெருங்கிய வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. கடந்த பொதுத் தேர்தல்களின்போது, ஐ.தே.முன்னணி தனது தேர்தல் விஞ்ஞாபனத்தில் - இடைக்கால நிர்வாகக் கட்டமைப்புக் குறித்து பிரஸ்தாபித்திருந்ததை இவ்வட்டாரங்கள் சுட்டிக்காட்டுகின்றன.

## ஐரோப்பிய யூனியன் பிரதிநிதி கூறுகின்றார்

(யாழ்ப்பாணம்)

வொஷிங்ரனில் நடைபெற்ற மாநாடானது ஒரு கருத்தரங்கு மட்டுமே. உலகிலுள்ள உதவி வழங்கும் நாடுகள் மற்றும் அமைப்புக்களின் கவனத்தை இலங்கை மீது ஈர்க்கும்பொருட்டே, அந்த வொஷிங்ரன் மாநாடு நடைபெற்றது. அது இலங்கைக்கான என்னென்ன உதவிகளை, என்னென்ன வடிவில் வழங்கப்போகிறோம் என்பதைத் தெளிவாகக் கூறும் மாநாடு அல்ல. ஆனால், ரோக்கியோ மாநாடே இலங்கைக்கான சுபீட்சத்துக்கும், அபிவிருத்திக்குமான மாநாடு என, நேற்று பஸ்ரியன் விடுதியில் நடைபெற்ற பத்திரிகையாளர் சந்திப்பின்போது, ஐரோப்பிய யூனியன் பிரதிநிதி வூல்டர் வில்ரன் தெரிவித்தார்.

யாழ்.குடாநாட்டின் தற்போதைய நிலைமை தொடர்பாகத் தனது மதிப்பீடுகளைச் செய்யவும், நிலைமைகளை ஆராய்ந்து, ரோக்கியோ மாநாட்டில் அவற்றைச் சமர்ப்பிக்கும் நோக்கத்திலும் - அரச அதிகாரிகளையும், மனிதாபிமானக் குழுக்களையும், சிவில் சமூகத்தின் பிரதிநிதிகளையும், யாழ். பேராயரையும் சந்தித்து - சமாதான நடைமுறை தொடர்பாகவும், புனர்வாழ்வு - புனரமைப்பு - மீள்குடியேற்றம் தொடர்பாகவும் வூல்டர் ஆராய்ந்தார்.

இவற்றை, ரோக்கியோ மாநாட்டில் அவர் முன்வைக்கவுள்ளார்.



கடந்த இரண்டு தினங்களிலும் யாழ். போதனா வைத்தியசாலை, (10 ஆம் பக்கம் பார்க்க)

## விண்ணாணம் விநாசியார்



ஆட்டம் காட்டுறதெண்டுதான் அம்மையார் தீர்மானிச்சிருக்கிறார்...

# மட்டக்களப்பில் போராளிகள் திருப்பி அழைக்கப்பட்டனர்!

## போராளி படுகொலையை அடுத்து நடவடிக்கை

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு மற்றும் அம்பாறை மாவட்டங்களின் இராணுவக் கட்டுப்பாட்டுப் பகுதிகளிலிருந்து விடுதலைப் புலிகளின் உறுப்பினர்கள் மீண்டும் திருப்பி அழைக்கப்பட்டுள்ளனர்.

கடந்த புதன்கிழமை, மட்டக்களப்பு காரைதீவில் விடுதலைப் புலிகளின் போராளி ஒருவர் கொலைசெய்யப்பட்ட சம்பவத்தைத் தொடர்ந்தே, மேற்படி நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டதாகத் தெரியவருகின்றது.

இராணுவக் கட்டுப்பாட்டுப் பகுதிகளில் அரசியல் பணிகளில் ஈடுபடுவதற்காக, அப்பகுதிகளில் தங்கியிருந்து செயற்பட்ட விடுதலைப் புலிகளின் உறுப்பினர்கள் அனைவரும் மேற்படி சம்பவத்தைத் தொடர்ந்து அங்கிருந்து புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதிக்குத் திருப்பியழைக்கப்பட்டுள்ளனர். போராளிகளின் பாதுகாப்பை உறுதிசெய்வதற்காகவே மேற்படி நடவடிக்கை எடுக்கப்பட்டதாகத் தெரியவருகிறது.

EXPO Aviation எக்ஸ்போ
இலங்கையில் முன்னணி வகிக்கும் உள்ளூர் விமான சேவை....
ஒதுக்கீடுகளுக்கு அழையுங்கள் 021 ~ 2223891 071 349999
071 348888 074 ~ 512666 ~ 01 ~ 360290
(சி -913)

# தமிழர் புனர்வாழ்வுக் கழக அலுவலகம் திருகோணமலையில் திறந்து வைப்பு!

(திருகோணமலை)

தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின் திருமலை மாவட்ட அலுவலகம், தம்பலகாமத்தில் நேற்று முன்தினம் திறந்து வைக்கப்பட்டது. அலுவலகத்தின் பெயர்ப்பலகையை, திருகோணமலை மாவட்ட அரசியற்துறைப் பொறுப்பாளர் திலக் திரைநீக்கம் செய்துவைத்தார்.

தமிழர் புனர்வாழ்வுக்கழக அலுவலகத்தை, மாவட்ட இணைப்பாளர் மாதவராசா திறந்து வைத்தார். இந்த நிகழ்வில் திருமலை மாவட்ட அரசியற்துறைப் பொறுப்பாளர் திலக் உரை நிகழ்த்துகையில்,

போர்க்காலங்களில், தமிழர் புனர்வாழ்வுக்கழகம் வன்னியில் பெரும் பணிகளை ஆற்றியது, கல்வி மற்றும் குழந்தைகளின் நலனுக்கு இந்நிறுவனம் பெரும் உதவிகளைச் செய்தது. புரிந்துணர்வு உடன்படிக்கையின் பின்னர், சேவைகள் விஸ்தரிக்கப்பட்டு, மாவட்ட ரீதியில் செயலகங்கள் அமைக்கப்பட்டு வருகின்றன.

இதன்மூலம், பாதிக்கப்பட்ட மக்களுக்கு நல்ல சேவைகளை வழங்கலாம் என்ற நம்பிக்கை உள்ளது. மக்களின் ஒத்துழைப்பு அதிகமாகக் கிடைத்தால், இன்னும் சிறப்பாகச் சேவையாற்ற முடியும் என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

# இயந்திரத்தை நிறுத்த இயலாது சென்ற ஜே.வி.பியினரின் படகு!

## வெள்ள நிவாரணத்தோடு சென்று அவலம்

கரந்தெனிய, வாடுவெலப்பிட்டிய பகுதிகளில் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரணம் வழங்குவதற்கு, மக்கள் விடுதலை முன்னணியின் நாடாளுமன்ற உறுப்பினர் சென்ற படகில் ஏற்பட்ட இயந்திரக்கோளாறினால், அவர் உயிராபத்தை எதிர்நோக்கினார்.

மக்கள் விடுதலை முன்னணியின் நாடாளுமன்ற உறுப்பினர் சந்திரசேன விஜயசிங்கவுக்கே இந்தக் கதி ஏற்பட்டது.

படகின் இயந்திரத்தை நிறுத்தமுடியாது அது தொடர்ந்தும் இயங்கியதால், படகு ஐந்து கிலோமீற்றர் தூரத்துக்கு அப்பால் சென்றே நின்றதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

பின்னரே, உரிய இடத்துக்கு வந்து நிவாரணப் பொருட்களை ஜே.வி.பியினர் விநியோகித்தனர்.

# உயர் தொழில்நுட்ப மாணவர்களும் வெள்ள அகதிகளுக்கு உதவி!

வெள்ளம், மண்சரிவுகளால் பாதிக்கப்பட்ட தென்பகுதி மக்களுக்கு யாழ். உயர் தொழில்நுட்ப நிறுவனத்தினரால் ஒரு தொகுதி நிவாரணப் பொருட்கள் அனுப்பப்படவுள்ளன.

உயர் தொழில்நுட்ப நிறுவன மாணவர்களால் வழங்கப்பட்ட ஒரு தொகுதி பணம், உடுபுடவைகள் மற்றும் உணவுப் பொருட்கள் அடங்கிய பொருட்கள் இன்று இந்துசமய விவகார அமைச்சின் அனுசரணையுடன் உயர் தொழில்நுட்ப தலைமை அலுவலகத்தின் ஊடாக வழங்கப்படவுள்ளன.

நிவாரணப் பொருட்களுடன் யாழிலிருந்து புறப்படும் உயர் தொழில்நுட்ப நிறுவன மாணவர் ஒன்றியப் பிரதிநிதிகள் கூடவே சென்று, நிவாரணப் பொருட்களை பாதிக்கப்பட்ட மக்களுக்கு வழங்கவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (25)

# களுத்துறைத் தமிழ் கைதிகளை உறவினர் சொந்த மாவட்டத்தில் பார்வையிட ஏற்பாடு!

## உள்துறை அமைச்சு நடவடிக்கை

(கொழும்பு)

களுத்துறைச் சிறைச்சாலையில், தடுத்துவைக்கப்பட்டிருக்கும் தமிழ் அரசியல் கைதிகளைச் சொந்த இடங்களுக்கு ஹெலிமூலம் கூட்டிச் சென்று - பெற்றோர், உறவினர்கள் பார்வையிட வசதிகளைச் செய்து கொடுக்க, உள்துறை அமைச்சர் ஜோன் அமரதுங்க நடவடிக்கைகளை மேற்கொண்டுவருவதாகத் தெரியவருகிறது.

மாதம் ஒருமுறை கைதிகளை இவ்வாறு சொந்த இடங்களுக்குக் கூட்டிச்சென்று ஒரு மணித்தியாலம் பெற்றோருடன் பேசுவதற்கு அனுமதிப்பதென முடிவு செய்யப்பட்டிருப்பதாக உள்துறை அமைச்சு வடடாரங்கள் தெரிவித்தன.

களுத்துறைச் சிறையில் தடுத்து வைக்கப்பட்டிருக்கும் தமிழ் அரசியல் கைதிகளின் பெற்றோர், உறவினர்கள் கிழக்கு மாகாணம் மற்றும் யாழ்ப்பாணம் ஆகிய பகுதிகளிலிருந்து, பல்வேறு பிரச்சினைகளுக்கு முகங்கொடுத்தே இவர்களைப் பார்வையிட வருகின்றனர்.

இதற்காக, சுமார் ஐயாயிரம் ரூபா வரை பெற்றோரால் ஒவ்வொரு பயணத்துக்கும் செலவிடப்படுகிறது.

இவ்வாறு பெரும்சிரமங்களுடன் களுத்துறைக்குச் செல்லும் உறவினர்களால் 15 நிமிட நேரமே கைதிகளைச் சந்தித்துப் பேசமுடிகிறது.

இதனைக் கவனத்திற்கொண்டே உள்துறை அமைச்சர் ஜோன் அமரதுங்க இந்த நடவடிக்கையை எடுத்துள்ளார் எனத் தெரியவருகிறது.

# தேர்தலை சந்தித்தால் வெற்றி அரசின் நிலைப்பாடு இதுவே!

## அமைச்சர் எஸ்.பி.திஸநாயக்க

(கொழும்பு)

ஜனாதிபதியினால் நாடாளுமன்றத்தைக் கலைக்க முடியும். அதே வேளை, ஜனாதிபதியின் இந்நடவடிக்கையைத் தடுக்கும் வல்லமை அரசாங்கத்துக்கு உண்டு என்று, அமைச்சர் எஸ்.பி.திஸநாயக்க தெரிவித்துள்ளார்.

எவ்வாறாயினும், எந்தவொரு சந்தர்ப்பத்திலும் தேர்தல் ஒன்றுக்கு முகம்கொடுத்து மீண்டும் வெற்றிபெறக் கூடிய வல்லமை அரசாங்கத்துக்கு இருப்பதாகவும், அவர் கூறினார்.

கண்டி உடரட்ட கலைச் சதுக்கத்தில், நேற்று இடம்பெற்ற கூட்டமொன்றில் அமைச்சர் திஸநாயக்க இவ்வாறு தெரிவித்தார்.

நிறைவேற்று அதிகாரத்துக்கும், நாடாளுமன்ற அதிகாரத்துக்கும் இடையில் ஏற்பட்டுள்ள சர்ச்சை, நிர்வாகத்துறை சீர்குலைவதற்கு காரணமாக அமையும் எனவும் குறிப்பிட்டார்.

நாட்டில் யார் அதிகாரத்தில் இருந்தாலும், மக்களை மீறி எவராலும் செயற்படமுடியாது என்றும் அமைச்சர் திஸநாயக்க மேலும் தெரிவித்தார்.

# பலநாள் திருடர்கள் சிக்கினர்

ஒரு மாதத்துக்கு முன், அச்சுவேலியில் உள்ள பல்பொருள் வாணிப நிலையம் ஒன்றில், பொருட்களைத் திருடிய மூன்று இளைஞர்கள் நேற்று முன்தினம் பிடிபட்டனர்.

அச்சுவேலி இளைஞர்களால் சந்தேகத்தின்பேரில் பிடிக்கப்பட்டு விசாரித்தபோது, உண்மை தெரியவந்ததையடுத்து, செல்வநாயகபுரத்தைச் சேர்ந்த இவர்கள் மூவரும் பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டனர். (128)

# புலிகள் - படையினர் சந்திப்பு கட்டைபறிச்சானில் நடைபெறும்

தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும், இராணுவத்தினருக்குமான முக்கிய சந்திப்பு, எதிர்வரும் 28 ஆம் திகதி, திருகோணமலையில் நடைபெறவுள்ளது.

மூதூர் - கட்டைபறிச்சான் பகுதியில் உள்ள இராணுவ சூனியப் பிரதேசத்தில், இந்தச் சந்திப்பு நடைபெறவுள்ளது.

இந்த சந்திப்பின்போது, புரிந்துணர்வு ஒப்பந்த மீறல்கள் மற்றும் பல்வேறு விடயங்கள் ஆராயப்படவிருக்கின்றன.

விடுதலைப் புலிகள் தரப்பில, கேணல பதுமன் தலைமையிலான உள்ளூர் தளபதிகளும், படையினர் தரப்பில், பிரிகேடியர் சேனவீரவும் கலந்து கொள்ளவுள்ளனர். (04)

# வசதிகள் எதுவுமற்ற நிலையில் விவசாய ஆராய்ச்சி நிலையம்!

(கிளிநொச்சி)

கிளிநொச்சியில் உள்ள - வடபிராந்திய விவாசாய ஆராய்ச்சி நிறுவனம், எதுவித அடிப்படை வசதிகளுமற்ற நிலையில் இயங்கிவருகின்றது.

கடந்தகால போர் அனர்த்தங்களால், இவ்வாராய்ச்சி நிலையம் முற்றாக அழிவடைந்தது. 1996 ஆம் ஆண்டிற்கு முன், இங்கு 18 ஆராய்ச்சி உதவியாளர்கள், 28 ஊழியர்களும் கடமையாற்றி வந்தனர். தற்போது 6 பேர் மட்டுமே கடமையில் உள்ளனர். இதுவரை இந்நிலையம் புனரமைப்புச் செய்யப்படவில்லை.

மேலும், இங்கு மின்வசதி, நீர்பெறும் வசதிகளோ அற்ற நிலையில், கட்டடம் இடிந்து, பற்றைகள் வளர்ந்து மிக மோசமான நிலையில் காட்சியளிக்கின்றது.

தற்போது இந்த நிலையம், இடிந்த கட்டடப் பகுதியில் உள்ள ஓர் அறையிலேயே இயங்கிவருகின்றது.

இதேவேளை, போதிய வசதிகள் இன்மையால், விவசாய ஆராய்ச்சிகள் மேற்கொள்ள முடியாதுள்ளமை குறிப்பிடத்தக்கது. (34)

**விற்பனைக்கு**

1 - 37H.P - 490R.P.M BLACK STONE என்ஜின்
1 - 18K.V.A - 3 பேஸ் டைனமோ (இங்கிலீஸ்)
1 - 30H.P - 3பேஸ் 1500 R.P.M 'PEM" மோட்டர்
1 - 25 H.P 3 பேஸ் 'BROOKS" மோட்டர்
2 - ஸ்ரோரேச் டாங்குகள் (இரும்பு) 2x30000LT
(ஒன்றின் கொள்ளளவு 30000 லீற்றர்)
உடனடி விற்பனைக்கு உண்டு.

தொடர்பு: A.செல்வநாயகம்
அரைக்கும் ஆலை
கே.கே.எஸ் வீதி, இணுவில்.

(சி- 953)

**பிறந்த நாள் வாழ்த்து**



உடுவிலைச் சேர்ந்த தேவதாசன் கலைவாணி தம்பதிகளின் அன்புப் புதல்வன் றஜீதரன் இன்று (25-05-2003) தனது இல்லத்தில் 10ஆவது பிறந்தநாளைக் கொண்டாடுகின்றார். இவரை சகல சௌபாக்கியங்களும் பெற்று நீடூழி வாழ்க என வாழ்த்துகின்றனர்.

அன்பு அப்பா, அம்மா,
றஜீவன் அண்ணா,
உறவினர்கள்.

(355)

**அன்பளிப்பு**

உலக சூழல் தினத்தை முன்னிட்டு பயன்தரும் மரக்கன்றுகளை 10 வெற்றுப் பால்மா பைக்கற்றுகளைக் கொடுத்துப் பெற்றுக்கொள்ளவும்.

மில்க்வைற் சோப் தொழிலகம்,
525/2, கே.கே.எஸ் வீதி,
த.பெ.இல.77
யாழ்ப்பாணம்.

(சி-903)

நிறைஞ்சனாஸ் சங்கானை
ரஜனி, ரம்பா, சௌந்தர்யா
அருணாசலம்
காட்சி நேரம் 11.00, 2.45, 6.00 (பு.நே)
வெள்ளி, சனி, ஞாயிறு (இரவு 8.45)
CASTAWAY
(சி-882)

ராஜா யாழ்ப்பாணம்.
3 வது வாரம்
இளைய தளபதி விஜய்,
மீராஜஸ்மின், கருணாஸ்
புதிய கீதை
தினசரி 10.30, 2.30, 6.30
சனி, ஞாயிறு 10.30, 2.30, 6.30, 9.30
(சி-883)



# சின்னஞ்சிறு செய்திகள்

## ஆனைக்கோட்டையில் இலவச மருத்துவ சேவை

(யாழ்ப்பாணம்)

ஆனைக்கோட்டை பாலசுப்பிரமணிய வித்தியாலயத்தில், இன்று காலை 9 மணிமுதல் மாலை 4 மணிவரை, தியாகி அறக்கொடை திட்டத்தின் கீழ் நடமாடும் இலவச மருத்துவ சேவை நடைபெறவுள்ளது.

## அனைத்து தொண்டராசிரியர் கவனத்துக்கு!

(யாழ்ப்பாணம்)

நிரந்தர நியமனம் தொடர்பாக, மிக முக்கிய பதிவுகள் எதிர்வரும் செவ்வாய், புதன் ஆகிய தினங்களில், ஆரியகுளம் புதிய உயர் கல்லூரியில் காலை 10.30 மணிக்கு மேற்கொள்ளப்படவிருப்பதால் - யாழ். மாவட்டத்திலுள்ள அனைத்துத் தொண்டர் ஆசிரியர்களும் தவராது சகல கல்வி ஆவணங்களுடனும், வருகைதந்து பதிவினை மேற்கொள்ளுமாறு, யாழ். மாவட்ட தொண்டர் ஆசிரியர் சங்கம் கேட்டுக்கொள்கிறது.

## விளக்கமறியல் நீடிப்பு

ஆயுதங்கள் மற்றும் வெடிபொருட்களுடன் சென்றதாக, கடந்த 8 ஆம் திகதி திருமலைக் கடலில் கைதான இரு போராளிகளுக்கான விளக்கமறியல், ஜுன் 5ஆம் திகதி வரை நீடிக்கப்பட்டுள்ளது. திருமலை நீதிவான் இவ்வுத்தரவைப் பிறப்பித்துள்ளார்.

## மரக்கறி விலை உயர்வு

சாவகச்சேரி சந்தையில் தற்போது மரக்கறி வகைகளான - கத்தரி, பயிற்றங்காய், பச்சை மிளகாய் போன்றவற்றின் விலைகள் உயர்ந்துள்ளன.

## பெண்களுக்கான கடிகாரம் கண்டெடுப்பு

(யாழ்ப்பாணம்)

பொற்பதியிலுள்ள விடுதலைப் புலிகளின் அலுவலகத்துக்கு முன்னால், பெண்களுக்கான கைக்கடிகாரம் ஒன்று கண்டெடுக்கப்பட்டுள்ளது. உரியவர்கள் தகுந்த ஆதாரம் காட்டி, அரசியற்துறை அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம் என்று தெரிவிக்கப்படுகிறது.

# பொதுத் தேர்தலை எதிர்கொள்வதற்காக கட்சி அமைப்புகளை ஐ.தே.க. புனரமைப்பு

பொதுத்தேர்தலுக்கு முகங்கொடுக்கும் வகையில் கட்சியின் சகல அமைப்புக்களையும் பலப்படுத்தவும், அவற்றைத் தயார்நிலையில் வைத்திருக்கவும் ஐக்கிய தேசியக்கட்சி முடிவுசெய்திருக்கிறது.

தற்போதைய அரசியல் நெருக்கடிக்கு எவ்வாறு முகங்கொடுப்பது என்பது பற்றி ஆராய -

கட்சியின் உயர் மட்டக்குழுவின் கூட்டம் கட்சியின் தலைமையகமான சிறிகோத்தாவில் நடைபெற்றது. ஐ.தே.கவின் பிரதித் தலைவரும், அமைச்சருமான கருஜெயசூரிய தலைமையில் இடம்பெற்ற இக்கூட்டத்திலேயே மேறபடி முடிவெடுக்கப்பட்டது.

இந்தக் கூட்டத்தில் அமைச்சர்களான எஸ்.பி.திஸநாயக்க, ஜி.எல். பீரிஸ், கட்சித் தவிசாளர் மலிக் சமரவிக்கிரம, கட்சியின் செயலாளர் செனரத் கப்புகொட்டுவ உட்படக் கட்சியின் அமைப்பாளர்கள் பலரும் கலந்துகொண்டனர்.

அபிவிருத்தி லொத்தர்சபையை ஜனாதிபதி பொறுப்பேற்றுக் கொண்டதால், அரசியல் நெருக்கடி தீவிரமடைந்தால் தேர்தலுக்குச் செல்ல வேண்டுமென இக்கூட்டத்தில் சுட்டிக் காட்டப்பட்டது.

இதையடுத்தே தேர்தலுக்குத் தயாராகும் வகையிலும கட்சியின் அனைத்து அமைப்புக்களையும் பலப்படுத்தும் வகையிலும், சகல அமைப்புக்களையும் புனரமைக்க முடிவுசெய்யப்பட்டது.

வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட பகுதிகள் தவிர்ந்த, ஏனைய சகல மாவட்டங்களிலும் கட்சியைப் புனரமைக்கும் பணிகள் இந்த வாரம் முதல் ஆரம்பிக்கப்படவுள்ளன.

## இரவுநேர விற்பனை நிலையங்கள் அமைக்கத் திட்டம்

(கொழும்பு)

நாடு முழுவதும் இரவுநேரச் சில்லறை விற்பனை நிலையங்களைத் திறக்கும் அரசாங்கத்தின் திட்டத்துக்கமைய, முதலாவது விற்பனை நிலையம் மீகொடவில் நேற்றுத் திறந்து வைக்கப்பட்டிருப்பதாக அமைச்சர் பந்துல விக்கிரமசிங்க தெரிவித்தார்.

இத்தகைய இரவு சில்லறை விற்பனை நிலையங்கள் - இரவு 7 மணிமுதல் அதிகாலை 5 மணி வரை திறந்திருக்கும். நாடு முழுவதும் அறுபது இத்தகைய இரவு நேரச் சில்லறை விற்பனை நிலையங்களைத் திறக்க அரசாங்கம் நடவடிக்கை எடுத்திருப்பது குறிப்பிடத் தக்கது.

## வேதாரணியத்துக்கும் வல்வைக்கும் இடையில் புலிகளின் போக்குவரத்து அதிகரித்துள்ளதாம்!

### சுப்பிரமணியம் சுவாமி கூறுகிறார்

தமிழகம் - வேதாரணியத்துக்கும், வல்வெட்டித்துறைக்குமிடையில் விடுதலைப் புலிகளின் கடல்வழிப் போக்குவரத்துக்கள் அதிகரித்திருப்பதாக இந்திய ஜனதாக்கட்சியின் தலைவர் சுப்ரமணியம் சுவாமி தெரிவித்துள்ளார்.

புதுடெல்கியில் செய்தியாளர் மத்தியில் பேசியபோதே சுப்ரமணியம் சுவாமி இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது -

ராஜிவ் காந்தியின் கொலைக்குப் பின்னர் புலிகள் மீது கடும் நடவடிக்கை எடுக்குமாறு மத்திய அரசாங்கத்தை வற்புறுத்த வேண்டிய சோனியா காந்தி மௌனமாகவிருந்து வருகிறார். அவரது காங்கிரஸ் கட்சியும்கூட இந்த விடயத்தில் மெத்தனப்போக்குடன் நடந்துகொள்வதாகவும் சுப்ரமணியம் சுவாமி மேலும் குற்றஞ்சாட்டியுள்ளர்.



'நமது ஈழநாடு' பத்திரிகை நிறுவனத்திற்கு யாழ். பல்கலைக்கழக சமுதாய மருத்துவத்துறை மாணவர்கள் தமது கற்றல் நடவடிக்கைக்காக வருகை தந்தபோது எடுக்கப்பட்ட படம்.

## ஆயுதக் கடத்தலை தடுப்பது குறித்து தாய்லாந்து தளபதியுடன் பேச்சு!

ஐந்து நாள் விஜயத்தை மேற்கொண்டு கொழும்பு வந்துள்ள, தாய்லாந்து கடற்படைத் தளபதி - இலங்கை கடற்படைத் தளபதி வைஸ் அட்மிரல் தயாசந்தகிரி மற்றும் முக்கிய கடற்படை அதிகாரிகளுடன் பேச்சுக்களை நடத்தியுள்ளார்.

இந்தப் பேச்சுக்களின்போது, தாய்லாந்துத் துறைமுகங்களூடாக இலங்கைக்கு ஆயுதங்கள் கடத்தப்படுவது குறித்து கடற்படைத் தளபதி தயாசந்தகிரியால் சுட்டிக்காட்டப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

தாய்லாந்தின் றனோய் மற்றும் புக்கட் ஆகிய துறைமுகங்கள் ஊடாகவே புலிகள் ஆயுதக்கடத்தலில் ஈடுபடுவதாகவும், இதனைத் தடுப்பதற்கு இரு நாடுகளும் இணைந்து தீவிரமான நடவடிக்கைகளை எடுப்பது குறித்து இரு நாட்டு கடற்படை அதிகாரிகளும் இணங்கியிருப்பதாகத் தெரியவருகிறது.

### கலந்துரையாடல்

(யாழ்ப்பாணம்)

பல்கலைக்கழக தொழிலாளர் கற்கைநெறி டிப்ளோமா பரீட்சையில் சித்தியடையாதோருக்கான மீள் பரீட்சை தொடர்பாக கலந்துரையாடுவதற்கு -

சம்பந்தப்பட்ட மாணவர்களை இன்று மாலை 4மணிக்கு க.பரராசசேகரன், 8, பிளர்சஸ் ஒழுங்கை, சுண்டுக்குழி என்ற முகவரிக்கு வருமாறு தொழிலாளர் கற்கைநெறி மாணவர் சங்கம் கேட்டுள்ளது.

## அரசியல் நெருக்கடி, கூட்டணி குறித்து நாடு முழுவதும் ஜே.வி.பி. பிரசாரம்

### இன்று முதல் நடத்த ஏற்பாடு

(கொழும்பு)

நாட்டில் தற்போது ஏற்பட்டுள்ள அரசியல் நெருக்கடி குறித்தும், சிறிலங்கா சுதந்திரக்கட்சியுடனான கூட்டணி குறித்தும் நாடு தழுவிய ரீதியிலான பிரசார நடவடிக்கைகளை மேற்கொள்ள ஜே.வி.பி. தீர்மானித்துள்ளது.

இன்று முதல் ஜூன் 3 ஆம் திகதிவரை இந்தப் பிரசார நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படவுள்ளன.

கொழும்பு, கம்பஹா, களுத்துறை, கண்டி, மாத்தளை, நுவரெலிய, காலி, மாத்தறை, அம்பாந்தோட்டை, குருநாகல், புத்தளம், இரத்தினபுரி, கேகாலை, அநுராதபுரம், பொலன்நறுவை, பதுளை, மொனறாகல, அம்பாறை ஆகிய மாவட்டங்களிலேயே இந்தப் பிரசார நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படவுள்ளன.

இந்தப் பிரசார நடவடிக்கைகளில் ஜே.வி.பியின் பிரசார செயலாளர் விமல் வீரவன்ச, நாடாளுமன்ற உறுப்பினர்கள் நந்தன குணதிலக, அநுரகுமார திசநாயக்க ஆகியோர் கலந்துகொள்ளவுள்ளனர்.

இந்தப் பிரசார நடவடிக்கையில் ஒரு கட்டமாகப் பத்து இலட்சம் துண்டுப்பிரசுரங்களை விநியோகிக்கவும் ஏற்பாடுகள் செய்யப்பட்டிருப்பதாகத் தெரியவருகிறது. (01)

## தொலைத்தொடர்பு கோபுரங்களை அமைப்பதற்கு அரசு கட்டுப்பாடு!

வானொலி மற்றும் தொலைத்தொடர்புக் கோபுரங்களை அமைப்பதற்குப் புதிய கட்டுப்பாடுகளை விதிக்கத் தகவல் தொடர்பு சாதன அமைச்சுத் தீர்மானித்துள்ளது.

அரசாங்க அனுமதி பெறப்படாமல் - விதிமுறைகளுக்குப் புறம்பான வகையில் தனியார் நிறுவனங்கள் கோபுரங்களை அமைப்பது இதன் மூலம் தடைசெய்யப்படும் எனத் தெரியவருகிறது.

எழுந்தமான முறையில் தனியார் நிறுவனங்கள் - இத்தகைய கோபுரங்களை அமைப்பதால், அவற்றிலிருந்து எழும் அலைகள், பொதுமக்களின் உடல் நலத்துக்குப் பாதிப்பை ஏற்படுத்துகின்றன. இதனைத் தடுக்கவே அரசாங்கம் கோபுரங்கள் அமைககப்படுவதைக் கட்டுப்படுத்த நடவடிக்கை எடுத்துள்ளது.

இது குறித்துத் தகவல் தொடர்பு சாதன அமைச்சர் இம்தியாஸ் பாக்கீர் மாக்கார் கருத்து வெளியிடுகையில் -

இத்தகைய பாதிப்புக்கள் குறித்துப் பிரதமர் ரணில் விக்கிரம சிங்கவிடம் எடுத்துக் கூறியிருப்பதாகவும், இதையடுத்து இத்தகைய பாதிப்புக்கள் தொடர்பான அறிக்கையைச் சமர்ப்பிப்பதற்காக ஏழு பேர் கொண்ட குழுவொன்று அமைக்கப்பட்டிருப்பதாகவும் தெரிவித்தார்.

இந்தக் குழுவில தகவல் தொடர்பு சாதன அமைச்சு, பாதுகாப்பு அமைச்சு, வனவள அமைச்சு, சூழல் பாதுகாப்பு அமைச்சு, சுகாதார அமைச்சு, தொலைத்தொடர்பு மறுசீரமைப்பு ஆணைக்குழு ஆகியவற்றைச் சேர்ந்த அதிகாரிகள் இடம்பெறவுள்ளனர்.

இந்தக் குழுவினர் பாவனையில் இல்லாத, அழிவுற்ற கோபுரங்கள் குறித்தும் ஆராயவுள்ளதாகத் தெரியவருகிறது.




திருகோணமலை - தம்பலகாமத்தில், தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின் மாவட்ட அலுவலகப் பெயர்ப் பலகையை திருமலை மாவட்ட அரசியற்துறை பொறுப்பாளர் திலக் திறந்துவைப்பதை படத்தில் காணலாம்.

## இலங்கை பெண்களை மணம் புரியும் வெளிநாட்டவருக்குப் பிரஜாவுரிமை!

### சட்டத்தில் திருத்தம் கொண்டுவர நடவடிக்கை

(கொழும்பு)

இலங்கைப் பெண்களைத் திருமணம் செய்துகொள்ளும் வெளிநாட்டவர்களுக்குப் பிரஜாவுரிமை வழங்க நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருவதாக மகளிர் விவகார அமைச்சர் அமரா பியசீலி இரத்நாயக்கா தெரிவித்தார்

இதற்கேற்ற வகையில் விரைவில் பிரஜாவுரிமைச் சட்டத்தில் திருத்தங்கள் செய்யப்படவுள்ளன. வெளிநாட்டவர்கள் - இலங்கையில் பிரஜாவுரிமையைப் பெற்றுக்கொள்வதில் பலத்த சிக்கல்கள் இருந்து வந்தன. குறிப்பாக இலங்கைப் பெணகளைத் திருமணம் செய்துகொள்ளும் வெளிநாட்டவர்களுக்கு இத்தகைய பிரச்சினைகள் அதிகமாக இருந்தன.

இந்தச் சிக்கல்களைத் தீர்த்துக் கொள்வதற்காகவே பிரஜாவுரிமைச் சட்டத்தில் திருத்தங்கள் செய்யப்படவுள்ளன. வெளிநாட்டவர்களைத் திருமணம் செய்துகொண்ட இலங்கை பெண்களுக்கு, பிறக்கும் குழந்தைகளுக்குப் பிரஜாவுரிமை பெறுவதில் தான் அதிக சிக்கல்கள் எதிர்நோக்கப்படுவதாகத் தேசிய பெண்கள் ஆணைக்குழு தெரிவித்துள்ளதுடன், இதற்காகப் பிரஜாவுரிமைச் சட்டத்தில் செய்யப்பட வேண்டிய திருத்தங்களுக்கான சிபார்சுகளையும் சமர்ப்பித்துள்ளது.

## திருமலை-விளாங்குளத்தில் விகாரை அமைப்பு முயற்சி

(கொழும்பு)

திருகோணமலை மாவட்டத்தில் உள்ள விளாங்குளத்தில் வெசாக் போயா தினத்துடன் புதிதாகப் புத்தர் சிலையொன்று வைக்கப்பட்டிருக்கிறது.

திருகோணமலை நகரிலிருந்து ஆறு கிலோ மீற்றர் தொலைவிலுள்ள தமிழ்க் கிராமமான விளாங்குளத்தில் பௌத்த ஆலயமொன்றை அமைக்கும் முயற்சிகள் எடுக்கப்பட்டிருந்தன.

இதற்கு - தமிழீழ விடுதலைப் புலிகளும், தமிழ்த்தேசியக் கூட்டமைப்பும் கடும் எதிர்ப்புத் தெரிவித்த நிலையில், விகாரை அமைக்கும் முயற்சிகள் கைவிடப்பட்டன. வெசாக் போயா தினத்துடன் விளாங்குளத்தில் புதிதாகப் சிறிய புத்தர்சிலை ஒன்று வைக்கப்பட்டு, விகாரை அமைப்பதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

விளாங்குளம் பகுதியில் வாழ்ந்த தமிழ்மக்கள் கடந்தகால இராணுவ நடவடிக்கைகளால் இடம்பெயர்ந்துள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.

### ஜப்பான் மேலும் உதவி

(கொழும்பு)

தென்பகுதியில் வெள்ளம் மற்றும் மண்சரிவுகளால் பாதிக்கப்பட்டிருக்கும் மக்களுக்காக ஜப்பான் மேலும் ஒரு இலட்சம் அமெரிக்க டொலரை உதவியாக வழங்கியுள்ளது.

ஏற்கனவே ஒருகோடி 66 இலட்சம் ரூபாவை ஜப்பானிய அரசாங்கம் வழங்கியிருந்தது.

## கணிதபாட விசேட வகுப்புக்கள்

(வடமராட்சி)

கரணவாய் பொன்னம்பல வித்தியாலயத்தில் அமைந்த வடமராட்சி கணித மூலவள நிலையத்தில், 2002 மார்கழி க.பொ.த.சாதாரணதரப் பரீட்சையில் தோற்றி, கணித பாடத்தில் சித்தியடையாத மாணவர்களுக்கான மேலதிக வகுப்புக்களை- செவ்வாய், வியாழன் ஆகிய நாட்களில், காலை 10 மணிமுதல் 1 மணிவரை நடாத்த வடமராட்சி கணித மூல வள பொறுப்பாசிரியர் சி.இராம கிருஷ்ணாவும், வேறு கணித ஆசிரியர்களும் திட்டமிட்டுள்ளனர்.

மேற்படி வகுப்புக்கள் -எதிர் வரும் 29 ஆம் திகதி வியாழக் கிழமை முதல் ஆரம்பமாகவுள்ளது. வகுப்புகளில் பங்குகொள்ள விரும்பும் மாணவர்கள், தமது பெயர்களை பாடசாலை நேரத்தில் கணித மூலவள நிலையத்தில் பதிவுசெய்து கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது.

## செல்வச்சந்நிதியில் நீரில் மூழ்கி மரணம்

(வடமராட்சி)

தொண்டைமனாறு செல்வச்சந்நிதி ஆலயக் கேணியில் குளித்துக் கொண்டிருந்த ஒருவர், வலிப்பு நோய ஏற்பட்டதனால், நீரினுள் மூழ்கி இறந்துள்ளார்.

நேற்றுமுன்தினம் இடம்பெற்ற இச்சம்பவத்தில் - பருத்தித்துறையைச் சேர்ந்த தங்கவேலாயுதம் (வயது 48) என்பவரே இறந்தவராவார்.

### கிளிநொச்சி - கனகபுரம் பகுதியில் இயங்கிய

# சிறுவர் இல்ல செயற்பாடுகள்

# இடைநிறுத்துமாறு உத்தரவு!

## தமிழீழ மாவட்ட நீதிமன்று விடுத்தது

(கிளிநொச்சி)

கிளிநொச்சி - கனகபுரம் பகுதியில் இயங்கிய சிறுவர் இல்லம் ஒன்றின் செயற்பாடுகளுக்கு, தமிழீழ மாவட்ட நீதிமன்றம் தடைவிதித்துள்ளது.

இது தொடர்பாக கிளிநொச்சி காவல் நிலையப் பெறுப்பாளர வெளியிட்டுள்ள அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

கடந்த ஒரு மாத காலமாக கிளிநொச்சி - கனகபுரம் பகுதியிலுள்ள ஆலய வளவில், இந்தியாவிலிருந்து நாடு திரும்பிய கனகபுரத்தைச் சேர்ந்த நபரொருவரால் "ஆனந்தம் இல்லம்" என்ற பெயரில் சிறுவர் இல்லம் ஒன்று ஆரம்பிக்கப்பட்டு, செயற்படுத்தப்பட்டு வந்தது. இந் நிலையத்தில் 12 வயதிற்கும் 16 வயதிற்கும் இடைப்பட்ட 100 வரையான சிறுவர், சிறுமியர் கல்வி கற்று வந்தனர்.

தமிழீழத்திலுள்ள எந்தவொரு நிர்வாகத்தினதும் அனுமதியைப் பெறாமலும், சிறுவர் பாதுகாப்பிற்கான நிலையான சட்டதிட்டங்கள் எதுவுமின்றியும் இயங்கிய இந்நிலையத்தின் செயற்பாடுகள், கிளிநொச்சி காவல்துறையினரின் கவனத்துக்குக் கொண்டுவரப்பட்டது.

இவ்விடயம் தொடர்பாக அரச, அரசசார்பற்ற நிறுவனங்களுடன் உடனடியாகத் தொடர்புகொண்ட காவல் துறையினர், தேவையான தரவுகளைப் பெற்றுக்கொண்டு, பூர்வாங்க விசாரணைகளை மேற்கொண்ட போது - சிறுவர் பாதுகாப்புக்கான ஏற்பாடுகள் எதுவும், இந்நிறுவனத்தில் காணப்படாத நிலையைக் கண்டறிந்தனர்.

இது விடயமாக உடனடியாக கிளிநொச்சி மாவட்ட நீதிமன்றில் சிறுவர் பாதுகாப்புத் தொடர்பான மனுவொன்றை கிளிநொச்சி காவல் துறையினர் சமர்ப்பித்தனர்.

இம்மனுவை, கடந்த 19 ஆம் திகதி விசாரணை செய்த கிளிநொச்சி மாவட்ட நீதிமன்ற நீதியாளர், குறித்த சிறுவர் கல்வி நிலையத்தின் செயற்பாடுகளை இடைநிறுத்தியதுடன், சிறுவர்களின் பாதுகாப்பையும், உரிமைகளையும் கருத்திற் கொண்டு உரிய அனுமதிகளைப் பெற்றுக்கொண்டே சிறுவர் கல்வி விடயத்தில் வேலைத்திட்டங்களை மேற்கொள்ளலாம் எனவும் கட்டளை வழங்கினார்.

## அழகுக்கலை கருத்தரங்கு

கொழும்பிலிருந்து வருகைதந்திருக்கும் திருமகள் சாந்தகுமார் நடாத்தும் இலவச அழகுக் கலைக் கருத்தரங்கு, இன்று காலை 10 மணிக்கு யாழ். பல நோக்குக் கூட்டுறவுச் சங்கக் கேட்போர் கூடத்தில் நடைபெறவுள்ளது. இக்கருத்தரங்கில் - அழகுக்கலையில் ஆர்வமுடைய 18 வயதுக்கு மேற்பட்ட ஆண், பெண் இருபாலாரும் கலந்துகொள்ளலாம் என அறிவிக்கப்பட்டுள்ளது.

## ஓமந்தையில் கண்ணி அகற்றல்

ஓமந்தை மத்திய மகாவித்தியாலத்தை இயங்கவைக்கும் நோக்குடன், அந்தப் பிரதேசத்தில் புதைக்கப்பட்ட கண்ணிவெடிகள் அகற்றும் பணிகளில் சுவிஸ் நாட்டுக் கண்ணிவெடி அகற்றும் நிறுவனமான எவ்.எஸ்.டி. ஈடுபட்டுள்ளது.

ஓமந்தை மகாவித்தியாலயம் - நீண்டகாலம் இராணுவமுகாமாக இயங்கிவந்தது. ஓமந்தைப் பகுதியில் உள்ள இடம்பெயர்ந்த மக்கள் மீள் குடியேற்றப்படுவதுடன், வெளிநாட்டு உதவியுடன் பாடசாலை புனர்நிர்மாணம் செய்யப்படவுள்ளது.

அடுத்த மாத முடிவுக்குள் கண்ணிவெடிகள் அகற்ற முடியும் என, எஸ்.எஸ்.டி. கண்ணிவெடிப் பிரிவினர் தெரிவித்துள்ளனர்.



கடந்த வாரம் நடைபெற்ற, அச்சுவேலி பனை தென்னைவள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கத்தின் கிராமிய வங்கி திறப்பு விழாவில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் சு.கணேசமூர்த்தி (பனை தென்னை வளம், யாழ்ப்பாணம்) மங்கள விளக்கினை ஏற்றிவைக்கிறார். அருகிலே சங்கத் தலைவர், பொது முகாமையாளர் மற்றும் விழாவில் கலந்துகொண்ட பொதுமக்களையும் படத்தில் காணலாம்.

# சுதந்திரக் கட்சி - ஜே.வி.பி.கூட்டு; உடனடியாக பதிவுசெய்ய முடியாது!

(கொழும்பு)

சிறிலங்கா சுதந்திரக்கட்சி மற்றும் மக்கள் விடுதலை முன்னணி ஆகியவை இணைந்து, புதிய கட்சியாக தேர்தல் அலுவலகத்தில் பதிவுசெய்துகொள்வதற்கு சட்ட ரீதியான சிக்கல்கள் இருப்பதாக ஜனாதிபதி செயலக வட்டாரங்கள் தெரிவித்ததாக 'லங்காதீப' பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது.

தேர்தல் நடைமுறைக்கேற்ப கட்சிகளைப் பதிவுசெய்யுமாறு அறிவிக்கப்பட்ட காலத்தில் பதிவுசெய்ய விண்ணப்பிக்காததால், இந்த இணைந்த புதிய கட்சியை உடனடியாகப் பதிவுசெய்ய முடியாது என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

வடக்கு - கிழக்கு மாகாணத்தில் உள்ளூராட்சித் தேர்தல் ஜூன் 25 ஆம் திகதி நடைபெறுமென அறிவிக்கப்பட்டுள்ள நிலையில், கட்சிகள் எதையும் புதிதாக தேர்தல் அலுவலகத்தில் பதிவுசெய்ய முடியாது என்றும், இந்தத் தேர்தலுக்கான திகதி குறிக்கப்பட்ட பின்பு - பல கட்சிகள் பதிவுசெய்வதற்கு விண்ணப்பித்த போதிலும், அவர்களின் விண்ணப்பம் நிராகரிக்கப்பட்டது என்றும் தேர்தல் ஆணையாளர் தெரிவித்துள்ளார்.

விடுதலைப் புலிகள் - சமாதானப பேச்சுவார்த்தைகளில் இருந்து தற்காலிகமாக ஒதுங்கியதால், உள்ளூராட்சிச்சபைத் தேர்தல் பிற்போடப்படக்கூடிய வாய்ப்புக்கள் உள்ளதாகவும் 'லங்காதீப' செய்தி வெளியிட்டுள்ளது.

# துரிதமாக கண்ணியை அகற்ற வன்னியில் புதிய திட்டம்!

தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின் மனிதநேய கண்ணிவெடி அகற்றும் பிரிவினரால் - பொறி வெடிகள், மிதிவெடிகள், கண்ணிவெடிகள் அகற்றுதல் தொடர்பாக புதிய திட்டம் ஒன்று அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

வெடிபொருட்கள் சம்பந்தமாக உடன் உதவி தேவைப்படின், மனிதநேய கண்ணிவெடி அகற்றும் பிரிவின் அனைத்து விழிப்புணர்வு நிலையங்களிலும், வெடிபொருட்கள் அகற்றும் உதவிப்பணி படிவத்தைப் பெற்று, அதனைப் பூர்த்தி செய்து வழங்கினால் - அந்தப் பகுதிக்கு வெடிபொருள் அகற்றும் அணியினரை விரைவாக அனுப்பி, கண்ணிவெடிகளை அகற்றி, அந்த வெடிபொருட்கள் அகற்றப்பட்டமைக்கான சான்றிதழ் வழங்கப்படும் என மனிதநேய கண்ணிவெடி அகற்றும் பிரிவு தெரிவித்துள்ளது. (108)

# தூண்டி இலக்கிய வட்டத்தின் ஏற்பாட்டில் ஈழத்து தமிழ்க் கவிதை ஆய்வரங்கு !

தூண்டி இலக்கிய வட்டம் நடாத்தும் 'ஈழத்துத் தமிழ்க்கவிதை' ஆய்வரங்கு - எதிர்வரும் சனி, ஞாயிறு தினங்களில், யாழ். பல்கலைக்கழக நூலகக் கேட்போர் கூடத்தில் நடைபெறவுள்ளது.

நான்கு அமர்வுகளாக நடைபெறவுள்ள மேற்படி நிகழ்வுகளில், முதலாவது அமர்வுக்கு கலாநிதி இ.முருகையன் தலைமை தாங்கவுள்ளார். இதில் - கவிஞர்கள் பசுபதி, வில்வரத்தினம், முகுந்தன் ஆகியோரது படைப்புக்களை ஈ.குமரன் ஆய்வு செய்யவுள்ளார்.

தொடர்ந்து நடைபெறவுள்ள கலந்துரையாடல்களின்போது- சேரன், சோலைக்கிளி, ஔவை, ஆகர்ஷியா ஆகியோரது படைப்புக்களை, எஸ். கருணாகரனும் - நீலவாணன், சோ. பத்மநாதன், திருமாவளவன், அரவிந்தன் ஆகியோரது படைப்புக்களை சு.வில்வரத்தினமும் ஆய்வு செய்யவுள்ளனர்.

இரண்டாவது அமர்வுக்கு, சோ. பத்மநாதன் தலைமை தாங்கவுள்ளார். இதில் - எம்.ஏ.நு:மான், இராமலிங்கம், நிலாந்தன், சக்கரவர்த்தி ஆகியோரது கவிதைகளை கலாநிதி செ.யோகராசாவும் - சிவசேகரம், பா. அகிலன், அ.யேசுராசா, வானதி ஆகியோரது கவிதைகளை எம். நிலாந்தனும், வ.ஐ.ச.ஜெயபாலன், மு.பொன்னம்பலம், ஓட்டமாவடி அரபாத் ஆகியோரது கவிதைகளை ந.சிவலிங்கனும் ஆய்வு செய்யவுள்ளனர்.

தொடர்ந்து ஞாயிறு காலை 9 மணிக்கு நடைபெறவுள்ள நிகழ்வுக்கு - கலாநிதி ஏ.நு:மான் தலைமை தாங்கவுள்ளார்.

இதில் ஊர்வசி, சிவரமணி, மைதிலி, ஆழியாள் ஆகியோரது கவிதைகளை பா.அகிலனும் - இ.முருகையன், சில்லையூர் செல்வராசன், தருமு சிவராம், ஆத்மா ஆகியோரது கவிதைகளை மு.பொன்னம்பலமும் - அஸ்வகோஸ், றஷ்மி, கருணாகரன், அமரதாஸ் ஆகியோரது கவிதைகளை அ.யேசுராசாவும் ஆய்வு செய்யவுள்ளனர்.

மாலை 1.30 மணிக்கு ஆரம்பமாகவுள்ள இரண்டாவது அமர்வுக்கு, பேராசிரியர் அ.சண்முகதாஸ் தலைமைதாங்கவுள்ளார்.

இதில் - மஹாகவி ச.வே.பஞ்சாட்சரம், காரை சுந்தரம்பிள்ளை கல்வயல் வே.குமாரசாமி ஆகியோரது கவிதைகளை கலாநிதி செ.திருநாவுக்கரசுவும், காசி ஆனந்தன், ஈழவாணன், நட்சத்திரன் செவ்விந்தியன், த.ஜெயசீலன் ஆகியோரது கவிதைகளை சோ.பத்மநாதனும் - சுபத்திரன், சண்முகன் சிவலிங்கம், புதுவை இரத்தினதுரை, சாருமதி ஆகியோரது கவிதைகளை கலாநிதி எம்.ஏ.நு:மானும் ஆய்வு செய்யவுள்ளனர்.

## உடுவில் கோட்ட கல்வி அதிகாரியாக குபேரநாதன்

கடந்த ஐந்து மாதங்களாக வெற்றிடமாகவிருந்த, உடுவில் கல்விக் கோட்ட கல்வி அதிகாரி பதவிக்கு, இணுவில் இந்துக்கல்லூரி அதிபராகவிருந்த எஸ்.குபேரநாதன் - வலயக்கல்விப் பணிப்பாளரால் நியமிக்கப்பட்டுள்ளார்.

இவரின் நியமனத்தையடுத்து, கோட்ட அலுவலகத்தில் தேங்கிக் கிடந்த ஏராளமான வேலைகள், துரித கதியில் செயற்படுமென எதிர்பார்க்கப்படுகின்றது.

வாழ்க வளமுடன்

HAPPY BIRTHDAY

முதலாவது அகவையில்



பெயர் : ஐ.றஜீதரன்
முகவரி : உடுவில் மேற்கு, சுன்னாகம்.

பல்லாண்டு காலம் வாழ்கவென வாழ்த்துகின்றோம்

வாழ்க வளமுடன்

சிறாரின் பெயர்:------------------
முகவரி :------------------
பிறந்த ஆண்டு:------------------
கூப்பன்கள் பத்தும், புகைப்படமும் இத்துடன் இணை

------------------
பெற்றார் ஒப்ப..

# தமிழர்களின் பாரம்பரிய மரபுவழி உடற்பயிற்சிக் கலை

## விளையாட்டு அரங்கம்

கடந்தவாரத் தொடர்ச்சி...

இக்கலையை நான் எனது தந்தையார் கரலாக்கட்டை ஆசான் செ.பொன்னுச்சாமியிடம் பயின்றேன். எனது தந்தையார் - அவர் மைத்துனர் பாலசுந்தரத்திடமும் பயின்றார். பாலசுந்தரத்தின் மாணாக்கரில் முக்கி யமானவர்கள் வல்வெட்டித்துறையைச் சேர்ந்த எல்லோராலும் அன்புடன் அழைக்கப்பட்ட பயில்வான் சோமுவின் மூத்த மகன் பழனி குறிப்பிடத்தக்கவர். பழனி - கரலாக்கட்டை வீச்சு, சிலம்புக் கலையை முழுமையாக பாலசுந்தரத்திடம் பயின்று புகழ் பெற்றார். இன்றும் பழனி இங்கு வாழ்ந்து வருகிறார்.



இக்கரலாக்கட்டைப் பயிற்சியில் தம்பி பொ. ரவீந்திரன் நன்கு தேர்ச்சி பெற்றிருந்தார். தான் நிர்வகித்து வந்த ரதி ஸ்ரோர்ஸ் கடையின் பின் பக்கம் இருந்த ஒலிம்பிக் கழகத்தின் மல்லர் சாலையில் பல வீரர்களுக்குக் கரலாக்கட்டைப் பயிற்சியைக் கற்றுக்கொடுத்தார். இக்கலை வளர பல சோடிக் கரலாக்கட்டைகளைத் தன் செலவில் செய்து இக்கலை வளரப்பாடுபட்டார். எங்கள் தந்தையார் ஞாபகார்த்தமாக ஒரு சோடிக் கரலாக்கட்டைகளை இன்பருட்டி காண்டீபன் விளையாட்டுக் கழகத்திற்கு 1982 ஆம் ஆண்டு அன்பளிப்பாக வழங்கியிருந்தார். காலச் சூழ்நிலை காரணமாக அவர் வெளிநாடு சென்றுவிட்டார். இன்று அவர் இங்கிருந்தால் இக்கலையின் ஒரு முன்னோடியாகத் திகழ்ந்திருப்பார் என்பதில் ஐயமில்லை. நடராசா மாஸ்ரர் இக்கலையில் சிறந்தவர். பருத்தித்துறை ஒலிம்பிக் விளையாட்டுக் கழகத் தலைவர் மா.இரத்தினசோதி அவர்க ளும் இக்கலையில் ஈடுபாடு உள்ளவர்.

1960 ஆம் ஆண்டு சித்திரை வருடப்பிறப்பு அன்று இக்கலையை எனக்கு - எனது தந்தையார் கற்றுக் கொடுத்தார்கள். அன்று ஆரம்பித்த இக்கலையை இன்று புதிய மாற்றங்களுடன் வீசிக்கொண்டிருக்கிறேன். 1976 ஆம் ஆண்டு கலைஞர் வட்டத்தினரின் - 'அவனும் மனிதன்தான்' டிராமாஸ்கோப் நாடகத்தின் ஒரு கட்டத்தில் முத்துவாக நடித்த நான், கரலாக்கட்டைகள் வீசிக்காட்டியுள்ளேன். 31.3.1996 ஆம் ஆண்டு மலாயன் சாண்டோ உடற்பயிற்சிக் கழக மேடையில் இளமையின் இரகசிய கருத்தரங்கில் கரலாக்கட்டைப் பயிற்சி செய்து காட்டியுள்ளேன். 'எனது இளமையின் இரகசியம்' நூல் வெளியீட்டுவிழா அன்றும் (13.6.2000) கரலாக்கட்டைப் பயிற்சிகள் செய்து காண்பித்தேன். இளமையின் இரகசியம் நூலிலும் கரலாக்கட்டை பயிற்சி பற்றி குறிப்பிட்டுள்ளேன்.



**இன்று இக்கலை**

தமிழர் மரபுவழிக் கரலாக்கட்டை உடற்பயிற்சிக்கலை, அன்று உடம்பின் மேற்பகுதி (UPPER BODY) இற்கு மட்டும் பொருந்துவதாக அறியக்கிடக்கின்றது. இன்று உடம்பின் மூன்று பகுதிகளுக்கும் கரலாக்கட்டை வீச்சுக்கள் உருவாக்கப்பட்டிருக்கின்றது. அதாவது - உடம்பின் மேற்பகுதி, கீழ்ப்பகுதி, வயிற்றுப்பகுதி (UPPER BODY , LOWER BODY, ABDOMINAL) கரலாக்கட்டை விளையாட்டுக்கலையின் பயன்தரக்கூடிய சுழற்சிமுறை ஒவ்வொன்றையும் ஆராய்ந்து, அறிந்து செய்முறைகளை அனுபவத்தில் பெற்று, அதன் மூலம் உடம்பின் மூன்று பகுதிகளுக்கும் தற்போது கரலாக்கட்டைச் சுழற்சிமுறைகளை உருவாக்கியுள்ளேன். ஒவ்வொரு சுழற்சிமுறையும் எந்த, எந்த தசைநார்களுக்குரியது என்ற விளக்கமும் கூறப்படுகின்றது.

தற்போது தமிழர் மரபுவழிக் கரலாக்கட்டை உடற்பயிற்சியில் கிட்டத்தட்ட முப்பது வீச்சுமுறைகள் இருக்கின்றன. முன்பு வீச்சுமுறைகளுக்குப் பெயர்கள் இருக்கவில்லை. முன்பிருந்த வீச்சுமுறைகளுக்கும், புதிதாக இன்று வீசப்படுகின்ற வீச்சுமுறைகளுக்கும் பாரதப்போரில் தண்டாயுத யுத்தத்தில் தலைசிறந்த வீரர்களது பெயர்களைச் சூட்டியுள்ளேன். இன்று வீமன் வீச்சு, துரியோதனன் வீச்சு, பலராமன் வீச்சு, கீசகன் வீச்சு, அனுமார் ஆகாய வீச்சுகள் எனச் சரித்திர வீர நாயகர்களின் பெயர் சூட்டப்பட்டு வீச்சுக்கள் பல வீசப்படுகின்றன.

அருகிவரும் தமிழர் மரபுவழிக் கரலாக்கட்டை உடற்பயிற்சி 12.4.2001 அன்று வியாழக்கிழமை தேவராஜன் இல்லத்தில் தும்பளையில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக வர்த்தக முகாமைத்துவ பீடாதிபதி மா.நடராசசுந்தரம் அவர்களால் அங்குரார்ப்பனம் செய்யப்பட்டது. வடமராட்சியில் உள்ள விளையாட்டு மத்தியஸ்தர்களும், விளையாட்டில் ஆர்வமுள்ள பிரமுகர்களும், விளையாட்டு வீரர்களும் கலந்து கொண்டனர். எனது மாணவன் தே.தேவராஜன் கரலாக்கடடை வீச்சுக்களைச் செய்து காட்டினார். புதிய வீச்சுக்களும் அறிமுகம் செய்து வைக்கப்பட்டன.

பொ.மகாதேவா

(தொடரும்...)

---

## யாழ் மாவட்ட உதைபந்தாட்ட வரலாறு

பிரித்தானிய தோட்டத்துரைமாரும், அரசாங்க உத்தியோகஸ்தர்களும், உதைபந்தாட்டம் பற்றிய வேதத்தை மேல்மாகாணம், மத்திய மாகாணம் மற்றும் தென்மாகாணத்திலும் பரப்பியபோது உதைபந்தாட்டம் வலுப்பெற்று இருந்த காலகட்டத்தில் வடமாகாணத்திலும் உதைபந்தாட்டச் செயற்பாடுகள் விரைவாக வீறுநடை போடத் தொடங்கியது. உள்ளூர்வாசிகள் மிகவும் ஆர்வமும், ஊக்கமும் கொள்ள - கல்லூரிகளை விட்டு விலகியவர்கள், இளம் அரசாங்க உத்தியோகஸ்தர்கள் உதைபந்தாட்ட வளர்ச்சிக்கு அயராது உழைத்தனர். பல உதைபந்தாட்டக் கழகங்களையும் உருவாக்கினர். 1930 களில் உதைபந்தாட்டம் யாழ். மாவட்டத்தில் ஆரம்பமானது. சரியாகக் கூறப்போனால், 1939 ஆம் ஆண்டு கார்த்திகை மாதம் 8 ஆம் திகதி யாழ்ப்பாண உதைப்பந்தாட்டச் சங்கம் - வை.எம்.சீ.ஏ இல் அங்குரார்ப்பனம் செய்துவைக்கப்பட்டது. இதன் முதற்தலைவராக ய.க.ஸ்பென்சரும், செயலாளராக R.E.இராஜநாயகமும் தெரிவுசெய்யப்பட்டனர். இச்சங்கத்தின் ஆரம்பக்கழக அங்கத்தவர்களாக இணைந்தவர்கள் வை.எம்.சீ.ஏ, பொலிஸ் விளையாட்டுக் கழகம், கலால் விளையாட்டுக் கழகம், சுண்டுக்குளி விளையாட்டுக் கழகம், புனித சூசையப்பர் விளையாட்டுக் கழகம், யாழ்ப்பாண அபிவிருத்திச் சங்கம், யூபிலி விளையாட்டுக் கழகம், புனித அன்ரனிஸ் விளையாட்டுக் கழகம், (தற்பொழுதும் இயங்கிக்கொண்டிருக்கிறது.) டொன்பொஸகோ விளையாட்டுக் கழகம், காரைநகர் விளையாட்டுக் கழகம் மற்றும் சுபாஷ் விளையாட்டுக் கழகம் என்பனவாகும்.


பகுதி - 03

வடக்கில் ஏனைய விளையாட்டுக்களுக்குச் சந்தர்ப்பம் வழங்கும் வகையில், உதைபந்தாட்டத்துடன் இன்னுமோர் சங்கம், யாழ். விளையாட்டுச் சங்கம் என்ற பெயரில் 1949 ஆம் ஆண்டு P.T ஹட்சன் (அரசாங்க அதிபர் - வடமாகாணம்) தலைமையில் ஆரம்பிக்கப்பட்டது. அவருடைய செயலாளராகப் P. செல்வரட்ணம் தெரிவுசெய்யப்பட்டார்.

எது எப்படியிருப்பினும் உதைபந்தாட்டத்துறையே அதிகம் வளர்ச்சிகண்டது. இதற்கு ஆதரவும் அதிகரித்தது. யாழ் சம்பத்திரிசியார் கல்லூரி விளையாட்டு விற்பன்னர், மோதா - உதைபந்தாட்டப் பகுதி வளர்ச்சிக்கு அளப்பெரிய சேவையாற்றி மூன்று பிரதான போட்டிகளை முன்னின்று நடத்தினார். அப்போட்டிகளாவன - அப்போதிக்கரீஸ் லீக் போட்டி, மன்னவராஜன் கேடய விலகல் முறைப்போட்டி மற்றும் இலங்கைக் காப்புறுதி ஸ்தாபன விலகல் முறைப்போட்டிகள் என்பனவாகும். அச்சமயம் சங்கத்தில் இணைந்திருந்த கழகங்கள் பின்வருமாறு -



விக்ரோறியன்ஸ் விளையாட்டுக் கழகம், வை.எம்.சீ.ஏ விளையாட்டுக் கழகம், குருநகர் விளையாட்டுக் கழகம், ஒறியன்ஸ் விளையாட்டுக் கழகம், புனித நிக்கலஸ் விளையாட்டுக் கழகம், பொலிஸ் விளையாட்டுக் கழகம், அரியாலை விளையாட்டுக் கழகம், சுபாஸ் விளையாட்டுக் கழகம், ஷாம்றொக் விளையாட்டுக் கழகம் மற்றும் மதுரபவான் விளையாட்டுக்கழகம்.



அதிககாலம் பிடிக்கவில்லை. ஸ்பென்சன் மற்றும் ஹட்சன் தலைமைகளிலான இரு சங்கங்களும் மறுபடியும் இணைந்து இளைஞர்களின் விளையாட்டுத் திறன்களை மேம்படச்செய்ய முனைந்தன. இதற்கிடையில் யாழ். உதைபந்தாட்டச் சங்கம், அதன் பெயரை யாழ். உதைபந்தாட்ட லீக் என மாற்றியது. இற்றைவரை இந்தப் பெயரிலேயே அது இயங்கிவருகின்றது. சென்ற 30 ஆண்டுகளில் வடக்கில் உதைபந்தாட்ட வளர்ச்சிக்கு அரும்பாடுபட்டு உழைத்த வர்களில் முக்கியம் வாய்ந்த ஒரு சிலரைக் கூறப்போனால் - V.K.ஆறுமுகம், வைத்திய கலாநிதி J.P.C.பிலிப்ஸ், E.R.குமரையா, E.சபாலிங்கம், E.கனகலிங்கம், A.S.குணரட்ணம், M.ஜீவரட்ணம், M.D.தம்பிராஜா போன்றவர்களாவார்.

V.K.ஆறுமுகம், வைத்திய கலாநிதி J.P.C. பிலிப்ஸ் போன்றோர் தமது நேரத்தையும், பணத்தையும் பொருட்படுத்தாது உதைபந்தாட்டத்திற்குத் தம்மை அர்ப்பணித்த பெருந்தகைகள் எனக்கூறுவது மிகையாகாது. தேசிய ரீதியில் காற்சுற்றில் பெருமை தேடித்தந்த சில வீரர்களின் விபரம் பின்வருமாறு,

எஸ்.என்.ஜே. அந்தோனிப்பிள்ளை, எம் பிரான்சிஸ், ஏ.சிறிதரன், எம்.சீவரட்ணம், எஸ்.வடிவேஸ்வரன், கொன்சலஸ், எம்.டாசன் மற்றும் ரீ.மரியதாஸ், கனியீட், பரமலிங்கம் ஆகியோரும்.

- எவ்.எக்ஸ்.சுதர்ஸன் -

**சிறந்த பயிற்சியாளர்**

M. டேவிட் தம்பிராஜா
K. நடராஜா
T. பத்மநாதன்
S. ரட்ணசிங்கம்

**சிறந்த மத்தியஸ்தர்கள்**

A.S. குணரட்ணம் FIFA
E. சபாலிங்கம் FIFA
E. கனகலிங்கம் FIFA
E.K. குமரையா FIFA
K. கிருஷ்ணன் FIFA
M.D. தம்பிராஜா Class 1
கிளிபேட் அன்ரனிப்பிள்ளை FIFA
A. தேவராஜா Class 1
யதுகுலசிங் Class 1
சிறினிவாச ஐயர்
K. நாகமணி Class 2

**சிறந்த நிர்வாகிகள்**

V.K. ஆறுமுகம்
வைத்திய கலாநிதி ஜே.பீ.சி.பிலிப்ஸ்
E.K. குமரையா
E. சபாலிங்கம்
E. கனகலிங்கம்
கணநாதன்
M.D. தம்பிராஜா
S. தயாளன்
கப்டன் சோமசுந்தரம்
எம். தேவராஜா
அருணகிரிநாதன்
வேதாபரணம்
கணேசானந்தன்
சரா. புவனேஸ்வரன்

**விரிவுரையாளர்கள்**

K. நாகமணி, M. டேவிட் தம்பிராஜா, S.N.J.அந்தோனிப்பிள்ளை, யதுகுலசிங்.

**சிறந்த நூலாசிரியர் (விளையாட்டுத்துறை)**


M. டேவிட் தம்பிராஜா, S.M. மார்டீன்

**சிறந்த மொழிபெயர்ப்பாளர்**

M.டேவிட் தம்பிராஜா, கிளிபேட் அன்ரனிப்பிள்ளை.

# சின்னத் திரையின் சிறப்புகள்

மைதானத்தில் கிரிக்கெட் ஆட்டம் பார்ப்பது ஒருவித ரசனை. தொலைக்காட்சியில் அதே ஆட்டங்களைப் பார்ப்பது இன்னொருவித ரசனை. அதுவும் தொலைக்காட்சியில்




ஒவ்வொரு வீரனுக்கும் அருகில் ரசிகர்களைக் கொண்டு சென்று நிறுத்துவது, பல்வேறு கோணங்களில் ஆட்டங்களைக் காட்சிப்படுத்தல், மிகமெதுவாக நிகழ்வுகளைக் காட்டுதல், இன்னும் என்னென்னவோ. இவை எல்லாவற்றையும் மிகுந்த உற்சாகத்துடன் பார்க்கும் ரசிகர்கள், இவற்றின் பின்புலம் என்ன என்பதையும் அறிந்துகொள்ள வேண்டாமா?

நாங்கள் பார்க்கும் ஒரு கிரிக்கெட் ஆட்டத்தை எமக்கு இவ்வளவு விறுவிறுப்பாகக் காட்டுவதற்குப் பதின்மூன்று T.V. கமராக்கள் பயன்படுத்தப்படுகின்றன. இவை மைதானத்தில் நிறுத்தப்பட்டிருக்கும் இடங்கள், அவை ஒவ்வொன்றினதும் கடமைகள் என்பவற்றை அறிந்து கொள்ளுதல் சுவையாக இருக்கும்.

**1 ஆவது, 3 ஆவது கமராக்கள்**

இருபக்க சைட் ஸ்கிரினில் இணைக்கப்பட்டிருக்கும். பந்து வீச்சாளரின் ஓட்டத்தைத் தொடர்வதோடு, துடுப்பாட்ட வீரரை **Focus** செய்யும்.

**2 ஆவது, 4 ஆவது கமராக்கள்**

இருபக்க சைட் ஸ்கிரினில் இணைக்கப்பட்டிருக்கும். பந்து-துடுப்பில் பட்டுத்தெறித்ததும், பந்தைத் தொடர்ந்து செல்லும். ஒவ்வொரு பந்து வீச்சையும் கமரா ஒன்றும், மூன்றும் கையகப்படுத்திய பின், கமரா 2 ஆம், 4 ஆம் அந்த **Shot** களை முறையே தொடர்ந்து செல்லும்.

**5 ஆவது கமரா**

**Mid Wicket** எல்லையில் ஒரு **Stand** இல் நிறுத்தப்பட்டிருக்கும். பந்து வீச்சாளரின் ஓட்டத்தை இது பின் தொடர்ந்து, பின்னர் துடுப்பாட்ட வீரர் எடுக்கும் ஓட்டங்களைக் கையகப் படுத்தும்.

**6 ஆவது, 7 ஆவது கமராக்கள்**

சிலிப் பகுதிக்கு நேரே (இருபுறமும்) பின்புற எல்லையில் தரையில் நிறுத்தப்பட்டிருக்கும். ஓடிவரும் பந்து வீச்சாளரைக் காட்டுவதோடு, துடுப்பாட்ட வீரர் பந்தைச் சந்திக்கும் கணத்தையும் காட்டும். இந்தப் படங்கள் மார்புப் பகுதி மேலான தோற்றத்தை மட்டும் காட்டும். இந்த இரண்டு ஒளிப்பதிவாளர்கள் மட்டுமே அமர்ந்திருக்கும் அதிர்ஷ்டம் பெற்றவர்கள்.

**8 ஆவது கமரா**

நாங்கள் பார்க்கும் **Slow Motion** இவரது கைங்கரியமே. சைட் ஸ்கிரினுக்கு அண்மையில் நிறுவப்பட்டிருக்கும். இது சாதாரண கமராக்களில் செக்கனுக்கு **25 Frame** என்பதை மீறிச் செக்கனுக்கு **75 Frame** எடுக்கும். காற்றில் மிதந்து ஓடுவது போன்ற காட்சிகள், **Close up** காட்சிகள், மீளக் காட்டும் காட்சிகள் என்பவையெல்லாம் இவரது கைங்கரியமே. இந்தக் கமராவின் விலை 250,000 அமெரிக்க டொலர் மட்டுமே.

**9 ஆவது கமரா**

படப்பிடிப்பாளர் கையில் வைத்திருந்து படம் எடுப்பது இதனால் மட்டுமே. பவிலியன் பக்கம் உள்ளவர்களை **Close up** இல் காட்டுபவர் இவரே.

**10 ஆவது, 11 ஆவது கமரா**

இந்தக் கமராக்கள் **BBC** இன் தேவைக்காகப் பிலிப்ஸ் நிறுவனத்தால் தயாரிக்கப்பட்டது. இது ஸ்ரம்ப்ஸ் கமரா எனப்படும். மைக்ரோபோன் இணைக்கப்பட்டிருக்கும். இதன் பெறுமதி 7000 ஸ்ரேலிங் பவுண். இந்தக் கமராக்கள் தரைக்கீழாகக் கேபிள்கள் மூலம் **OB** உடன் (**OUT STATION BROAD CASTING VEHICLE**) இணைக்கப்பட்டிருக்கும். வேகப்பந்து வீச்சாளர்களால் தாக்கப்படுவது இது. (**STUMP** சரிந்து மைதானம் தலைகீழாகத் தெரிவது உண்டல்லவா?)

**12 ஆவது, 13 ஆவது கமராக்கள்**

இவை இரண்டும் ரன் அவுட்டுகள் பற்றி எடுத்துக் காட்டுவது. இரண்டு **Stand** களில் எவரது உதவியும் இன்றித் தானாகவே இயங்கிக் கொண்டிருப்பது. இவை **BATTING CREASE** ஐ கழுகுகள் போலப் பார்த்துக் கொண்டிருக்கும்.

நான்கு '**Shot Guns**' என அழைக்கப்படும் கோன் (**Corn**) வடிவிலான நான்கு மைக்குகள் ரசிகர்களின் ஆரவாரங்கள், வேறு சத்தங்கள் போன்றவற்றைக் 'கப்' என்று பிடித்துக் கொள்ளும்.

இனிமேல் **T.V.** இல் கிரிக்கெட் ஆட்டங்களைப பார்ப்பவர்கள் இந்தச் சின்னத்திரைக்குப் பின்னால்- எவ்வளவு உழைப்பு, எவ்வளவு உயர் தொழில்நுட்பம், மில்லியன் கணக்கில் பணச்செலவு என்பன இருக்கும் என்பதையும் கூடுதலாக உணர்ந்து கொண்டவர்களாகவே இருப்பார்கள். அதோடு கிரிக்கெட்டுடன் இணைந்து விசாலமானதொரு அறிவுப் பரப்புக்குள்ளும் நுழைந்திருப்பார்கள்.

**நிர்மலன்**

# மறக்க முடியுமா

மேற்கிந்தியா, அவுஸ்திரேலியாவை நான்காவது டெஸ்டில் தோற்கடித்த பாணி, 1976 ஆம் ஆண்டின் பழைய நினைவுகளைக் கிளறிவிட்டது.



இந்த ஆட்டம் நடைபெற்றது டிரினிடாட்டில் உள்ள குயீன்ஸ் பார்க் ஓவல் மைதானத்தில். மேற்கு இந்திய அணி முதல் இன்னிங்ஸில் பெற்ற ஓட்டங்கள் 379. இதில் விவியன் றிச்சட்ஸ் குவித்தது 177. லொயிட் தன் பங்குக்கு 68 ஓட்டங்கள் பெற்றார். இந்தியாவின் சார்பில் புகழ் பெற்ற சுழற்பந்து வீச்சாளர் சந்திரசேகர் 120 ஓட்டங்களைக் கொடுத்து, 6 விக்கெட்டுக்களை வீழ்த்தினார். இதனைத் தொடர்ந்து துடுப்பெடுத்தாடிய இந்திய அணி - சேர்த்துக்கொள்ள முடிந்தது 228 மட்டுமே. மைக்கல் ஹோல்டிங் 6 விக்கெட்டுக்களில் 65 ஓட்டங்கள் மட்டும் கொடுத்து வீழ்த்தினார்கள்.

இரண்டாவது இன்னிங்ஸை 131 ஓட்ட முன்னணியுடன் ஆரம்பித்த மேற்கிந்திய அணி - எதுவித அலட்டலும் இல்லாமல், அல்வின் கலிச்சரன் சதம் போட்டதும் (103 ஆட்டம் இழக்காமல்) 6 விக்கெட் இழப்பிற்கு 271 என்றநிலையில் தன் ஆட்டத்தை நிறுத்திக் கொண்டது. எனவே, 403 அடித்தால் இந்தியா வெற்றி. ஆனால், அன்றைய மேற்கிந்திய அணிக்கு முன்னாள் இந்தச் சிந்தனையே ஒரு சுகமான கனவாகத்தான் இருந்திருக்க முடியும். ஆனால், சுனில் கவாஸ்கார் - கிளைவ் லொயிடிற்குப் பாடத்தைத் திருப்பிப் படிப்பிக்க எண்ணினார் போலும். லொயிட் எதிர்பார்க்காத வகையில், நான்காவது நாள் முடிவில் இந்திய அணியின் ஓட்ட எண்ணிக்கை ஒரு விக்கெட் இழப்பிற்கு 134. இதில் சுனில் கவாஸ்கார் 12 பவுண்டரிகளுடன், 86 ஓட்டங்கள் பெற்று ஆட்டமிழக்காமல் இருந்தார். இந்நிலையில் ஐந்தாம் நாளில் 269 ஓட்டங்கள் எடுத்தால் இந்தியாவுக்கு வெற்றி. அந்த நாள் சாதனை நாள். கவாஸ்கார் ஆட்டமிழந்து 102 ஓட்டங்கள் பெற்றார். விஸ்வநாத் ஆட்டம் இழந்து 112 ஓட்டங்கள் பெற்றார். மொகிந்தர் அமர்நாத் பெற்றது 85 ஓட்டங்கள். இறுதிமுடிவு இந்திய அணி 4 விக்கெட் இழப்பிற்கு 406. மிகப்பலமான மேற்கிந்திய அணியை அவர்கள் மண்ணிலேயே வைத்து வீழ்த்தினார்கள் இந்திய வீரர்கள். இந்த டெஸ்ட் என்றும் நினைவு கூரப்படும்.



**- சரண்யன் -**

# இதுவும் வேண்டும்

# இன்னும் வேண்டும்

வேறுவிதமாகக் களங்கள் நிர்ணயிக்கப்பட்டு - இறுதியில் திலங்க சுமதிபாலவின் புண்ணியத்தால் தம்புள்ளையில் ஒருவாறாக இலங்கை, பாகிஸ்தான், நியூசிலாந்து முத்தரப்பு ஒருநாள் ஆட்டங்கள் முடிவுக்குக் கொண்டுவரப்படுகின்றன. ஏன் திலங்க சுமதிபாலவிற்குப் புண்ணியமாகட்டும் என்பதில் ஒரு விடயம் இருக்கிறது. அதற்கு முன்பதாக இலங்கையில் காணப்படும் சர்வதேசக் கிரிக்கெட் மைதானங்கள் அனைத்துமே புவியியல் ரீதியில் ஈரவலயத்திலேயே காணப்படுகின்றன என்ற தகவலோடு, இன்னொரு வினாவையும் கேட்க வேண்டும். அதாவது, இப்போது நடைபெறும் முத்தரப்புப் போட்டிகள் இலங்கையின் அதிகூடிய மழைவீழ்ச்சிக் காலமான தென்மேல் பருவமழைக் காலமான இப்போது எந்தத் துணிவில் இலங்கையில் கிரிக்கெட்டை நடாத்த அதிகாரிகள் முன்வந்தார்கள் என்பதே அது. இயற்கையுடன் சவாலா? அல்லது இயற்கைச் சமநிலையையே மனிதகுலம் பாழாக்கிக் கொண்டிருக்கும் நிலையில், தென்மேல் பருவக்காற்றும் ஒடுங்கிவிடும் என்ற நினைப்பா தெரியவில்லை.

சில வருடங்களுக்கு முன்னர் இலங்கைக் கிரிக்கெட் சபையின் ஆற்றல்மிகு தலைவராக திலங்க சுமதிபால இருந்த போதுதான் - தம்புள்ளை நகரம் தெரிவுசெய்யப்பட்டு உலர்வலயத்திலும் ஒரு மைதானம் அமைவது ஆபத்தில் கைகொடுக்



கும் என்ற எண்ணத்தில், பல எதிர்ப்புகளுக்கும் மத்தியில் தம்புள்ள சர்வதேசக் கிரிக்கெட் மைதானம் அமைக்கப்பட்டது. அதனால்தான், தென்னிலங்கையில் ஏற்பட்டுள்ள பாரிய வெள்ளம், தொடர்மழை இவற்றால் பாதிக்கப்படாது தம்புள்ளையில் முத்தரப்புக் கிரிக்கெட் ஆட்டத்தொடர் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. அல்லாதுவிட்டால், பரீட்சையைப் பின்போடுவது போலக் கிரிக்கெட் ஆட்டங்களைப் பின்போட முடியாது. பாகிஸ்தான், நியூசிலாந்து வீரர்கள் தத்தம் நாட்டுக்கு எப்போதோ பறந்திருப்பார்கள். ரசிகர்கள் ஏமாந்திருப்பார்கள். இதனைத்தான் திலங்க சுமதிபாலவின் புண்ணியத்தில் என்று ஏலவே கூறப்பட்டது.

ரசிகர்கள் ஏமாறவில்லை என்பது உண்மைதான். என்றாலும், சில தரப்பினர் இலங்கைக் கிரிக்கெட் ரசிகர்களை ஏமாளிகள் என்று நினைக்கிறார்கள் போலத்தெரிகின்றது. முத்தரப்புக் கிரிக்கெட் போட்டியில் இலங்கை **OUT** என்பது கசப்பான செய்தி. கிரிக்கெட் அணியின் வண்டவாளம் இப்படியிருக்க நியூசிலாந்து அணியுடன் நடைபெற்ற போட்டியில் தோல்வி கண்ட இலங்கை - அடுத்து என்ன செய்வதென்று கடுமையாக யோசித்துத் திருமலைக்கு ஒருநாள் உல்லாசப் பயணம் ஒன்று போயிருக்கிறார்கள். விமர்சகர்கள் கருத்துக் கூறுகையில்- இலங்கை அணியினர் நியூசிலாந்து, பாகிஸ்தான் அணிக்கு இடையிலான ஆட்டத்தைப் பார்த்திருக்கவேண்டும். அதிலிருந்து பல விடயங்களைக் கற்றிருக்கவேண்டும். ஆனால், தொழில் பற்றிய சிந்தனையே இல்லாமல், கிராமத்தவர்கள் கூறுவதுபோல '**MY CAR, MY PETROL**' என்ற திமிரில் உல்லாசப் பயணம் புறப்பட்டிருக்கிறார்கள் என்றால், இவர்களின் மிதப்புத்தான் எத்தகையது? ரசிகர்கள் மாங்காய் மடையர்கள்தானே. இந்தவேளையில், ஆசிய உதைப்பந்தாட்டச் சபையின் முக்கிய பதவிவகிக்கும் மணிலால் பெர்னாண்டோ வெகுவிரைவில் இலங்கை உதைபந்தாட்டத்துறையை - கிரிக்கெட்டைவிட மேலானதாக வளர்ப்பேன் என்று உறுதிகூறியுள்ளார். உண்மையாகவே ஏழையின் விளையாட்டாகிய உதைபந்தாட்டம் பற்றி மிகத்தீவிரமான சிந்தனையைத் தட்டிவிடவேண்டிய நேரம் இலங்கை மக்களுக்கு வந்துவிட்டதுபோலவே தெரிகின்றது.

இதெல்லாம் ஒருபுறமிருக்க, மீண்டும் அக்தார் முருங்கை மரத்தில் ஏறிவிட்டார். சமர்த்துப் பிள்ளையாய் நடந்து கொள்ளவேண்டும் என்ற அறிவுறுத்தலின் பேரிலேயே இவர் பாகிஸ்தான் கிரிக்கெட் அணியில் சேர்த்துக் கொள்ளப்பட்டார். ஆனால், நியூசிலாந்துக்கு எதிரான ஆட்டத்தில் முறைகேடான முறையில் பந்தைச் சுரண்டிய குற்றச்சாட்டுக்கு அக்தார் உள்ளாகி, சில ஆட்டங்களில் விளையாட முடியாதபடி தண்டிக்கப்பட்டுள்ளார். பாகிஸ்தான் தன்னை எழுச்சிப் பாதையில் விரைவில் உயர்த்த முயற்சி செய்யும் இவ்வேளையில், அக்தாரின் இச்செயல் பாகிஸ்தான் அணிக்கு வெகு அவமானத்தை ஏற்படுத்திவிட்டது. எனவே, அக்தார் போன்றவர்கள் அணியிலில்லாதிருப்பது என்பதே அணிக்குப் பெருமைபோலத் தோன்றுகின்றது. கோட்னி, வோல்ஷ் போன்றவர்கள் தொட்டபந்தை அக்தார் போன்றவர்கள் தொடுவது உண்மையான கிரிக்கெட் வீரர்களுக்கு அவமானமாகும்.



**ஜோசப் கிருஷ்ணா**

நமது ஈழநாடு
267, Navalar Road, Jaffna.
T.P. - 021-2225107 www.eezhanadu.com

சிந்தனைக்கு

பேதைப் படுக்கும் இழவுஊழ் அறிவுஅகற்றும்
அகல்ஊழ் உற்றக் கடை.

- திருக்குறள்.

# நமது நோக்கு

## நிராகரிக்கப்படும் அமைதி!

'வேதாளம் மீண்டும் முருங்கை மரம் ஏறுவதாக' பொதுஜன ஐக்கிய முன்னணி - இடைக்கால நிர்வாகம் பற்றிய அரசாங்கத்தின் அறிவிப்பு எதுவும் வெளியாகும் முன்னரே - அவ்வாறான கோரிக்கை எதனையும் ஏற்கக்கூடாதென அரசாங்கத்திற்குத் தெரிவித்திருக்கிறது.

பொதுஜன ஐக்கிய முன்னணியின் பேச்சாளர் சரத் அமுனுகம இதனை தெரிவித்து ஒரு நாளாகும் முன்னரே- வெளிநாட்டுச் செய்தியாளர்களுடன் இரவு விருந்தொன்றில் கலந்துகொண்ட ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க, அரசியலமைப்பு வெளியே அமைக்கப்படும் இடைக்கால நிர்வாக முயற்சி எதனையும் தாம் நிராகரிப்பதாகக் கூறியுள்ளார்.

இந்த நிராகரிப்போடு மட்டுமல்லாது - நோர்வே மற்றும் ஜப்பானிய அரசாங்கங்களின் சமாதான முயற்சிகளையும் கடுமையான வார்த்தைகளால் சாடியிருப்பதோடு, அந்த நாடுகளின், குறிப்பாக ஜப்பானின் சமாதானப் பங்கு குறித்து கிண்டல் தொனிக்கும் வகையில் அவர் பேசியிருக்கிறார்.

ரோக்கியோவில் நடைபெறவிருக்கின்ற உதவிவழங்கும் நாடுகளின் மாநாட்டிலும், சமாதானப் பேச்சுக்களிலும் ஏற்பட்டுள்ள முட்டுக்கட்டைகளைப் போக்குவதற்காக தீவிரமாக முயற்சித்துவரும் இரண்டு நாடுகளதும் அரசாங்கங்களை எழுந்தமானத்திற்குக் குற்றஞ்சாட்டியிருக்கும் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க-

விடுதலைப் புலிகளின் இடைக்கால நிர்வாகக் கோரிக்கையை நிராகரித்திருப்பதன் மூலம் - அமைதி முயற்சிகளை தன்னால் முடிந்தளவுக்கு மூட்டை கட்டிவிடுவதற்குத் தயாராயிருப்பதை வெளிக்காட்டுகிறார்.

வெளிப்பேச்சுக்கு சமாதான முயற்சிகளுக்கு தான் ஒத்துழைப்பதாகவும், அமைதி முயற்சிகளைப் பாதிக்கும் வகையில் தான் நடந்துகொள்ளப்போவதில்லை எனவும் கூறிவரும் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க - சொல்லிலும் செயலிலும் முற்றிலும் முரணானவராக நடந்துகொள்வதையே வழக்கமாக்கிக் கொண்டுள்ளார் என்பது யாவரும் அறிந்ததே.

இதுவரை - தான் சொல்லிக்கொள்வது போல சமாதான முயற்சிகளுக்கு கிஞ்சித்தும் துணைசேர்க்கக் கூடியதாக நடந்திராத அவர் - தொடர்ச்சியாக சமாதான முயற்சிகளுக்குக் குழப்பங்களை விளைவிப்பவராகத்தான் நடந்து வருகின்றார்.

இந்தக் குழப்பங்களின் உச்சமாக - அமைதி முயற்சிகளில் இதுவரையில் ஏற்பட்டிராத தீவிரமான தேக்க நிலையொன்று ஏற்பட்டிருக்கும்போதும் - அத்தேக்க நிலையை அகற்றுவதற்கு ஒத்துழைக்காது, தான் தோன்றித்தனமாகச் செயற்படுவதாகவே ஜனாதிபதியின் அறிவிப்பு வெளியாகியிருக்கிறது.

ஜனாதிபதியைப் பொறுத்தவரையில் - இலங்கைத் தீவில் நிரந்தர சமாதானம் ஏற்படுத்துவதற்கான வாய்ப்பை வழங்குவதோ, தமிழ் மக்கள் போரின் பாதிப்புக்களிலிருந்து சுமுக வாழ்விற்குத் திரும்புவதோ அவருக்கு முக்கியமானதல்ல என்பதும்,

அரசாங்கத்திற்கும் விடுதலைப் புலிகளுக்குமிடையிலான அமைதிப் பேச்சுக்களை இக்கட்டில் கொண்டு விடுவதன் மூலம் - மீண்டும் பதற்றத்தையும், போரபாயத்தையும் இத்தீவில் உருவாக்குவதே அவரது எண்ணம் என்பதையும் உறுதியாக அறியமுடிகிறது.

'வீடு கொளுத்தும் இராசாவுக்கு நெருப்பெடுத்துக் கொடுக்கும் மந்திரிபோல' ஜே.வி.பி உட்பட சிங்கள இனவாத சக்திகள் அவரைச் சூழ்ந்துநிற்க - இலங்கைத் தீவைத் தறிகெட்ட நிலைக்குத் தள்ளிவிடுவதே இலக்கு என நடந்துவரும் ஜனாதிபதி - சமாதானத்தை ஏற்படுத்தவல்ல இறுதிச்சந்தர்ப்பத்தையும் தனது முன்யோசனையற்ற நடவடிக்கைகளால் ஆபத்திற்குள்ளாக்கியே வருகின்றார்.

கடந்த ஆட்சிக்காலத்தில் - தமிழ் மக்களின் பிரச்சினைகளைத் தீர்க்கும் 'தீர்வுப்பொதிகளை' தம்வசம் வைத்திருப்பதாக சர்வதேசத்தை ஏய்த்தவர் - இன்று, இடைக்கால நிர்வாகத்தை விடுதலைப் புலிகளிடம் கையளிப்பதன் மூலம் அமைதிச்சூழலைத் தக்கவைப்பதற்கு எதிர்ப்புத் தெரிவிப்பதனூடாக - தனது இரட்டை வேடத்தைத் தானே களைந்தவராகிறார்.

புனர்வாழ்வு - புனரமைப்பு நடவடிக்கைகளை முன்னெடுப்பதற்கான இடைக்கால நிர்வாகத்தைக்கூட நிராகரிக்கும் ஜனாதிபதியிடமிருந்து - 'தீர்வுப் பொதியை' எதிர்பார்த்து நிற்பது எத்தகைய மூடத்தனமானது, எம்மை நாமே ஏமாற்றிக்கொள்வதற்கு ஒப்பானது என்பதை தமிழ் மக்கள் இன்னும் அழுத்தமாகவே மனதிற் பதியவைக்கலாம்.

தமிழர்களுக்கான ஆகக்குறைந்த அதிகாரங்களை, உடனடித்தேவைகளை நிறைவேற்றுவதற்கான வழிவகைகளைக் கூடத்தருவதற்கு இந்த ஆர்ப்பாட்டம் போடும் சிங்களத் தலைமை, தமிழருக்கு நியாயமான, கௌரவமான தீர்வைத் தருவதற்கு முன்வருமா என்ற சந்தேகம் தமிழர்களிடம் இன்னமும் வலுவாகியிருக்க-

இனி அரசாங்கமும், சர்வதேசமும் ஜனாதிபதியைக் கட்டுப்படுத்துவதிலும், துணிச்சலான முடிவுகளுடன் தேக்கநிலையை கடப்பதிலும்தான் அனைத்துமே தங்கியிருக்கின்றது.

# கொள்ளியையும் கோலையும் குரங்கின் கையில் கொடுக்கும்...

*மேடம் சந்திரிகா அறிவது!*

ஆறு வற்றும் வற்றும் என்று காத்திருந்த கொக்கு - வயிறு வற்றிச் செத்ததாம் என்ற கதையாய் உங்கள் கதை முடியுமோ என்று தான் நாம் நினைத்தோம். ஆனால், சந்தர்ப்பம் பார்த்துக் கொத்திப்போட்டியள்...

அட... அதுதான்... உங்கள் அதிகாரம் எந்தளவுக்குச் செல்லும் என்று காட்டிப்போட்டியளே!

இருவாரங்களுக்கு முன் ரணில் விக்கிரமசிங்கவிற்கு எழுதிய பகிரங்கக் கடிதத்தில் அவரை எச்சரித்தேன். அரசியல் கிரிக்கெட்டில் நிதானமாக நின்று தடுத்தாடினால் மட்டும் போதாது. அதிரடியாகவும் சில அடிகளை அடிக்கவேண்டும் என்றும், வெறுமனே இந்தியாவிற்கும், இலங்கைக்கும் ஓடியோடி ஒன்று ஒன்றாகச் சிங்கிள் ஓட்டங்களை எடுத்தால் போதாது என்றும்... விரைவில் அவுட்டாகும் சாத்தியக் கூறுகள் உண்டு என்றும் எச்சரித்திருந்தேன்... அந்த மனிசன் அதைக் கவனித்தாரோ இல்லையோ...

நீங்கள் படுசுட்டியம்மா!

ஊர் இரண்டுபட்டால் கூத்தாடிக்குக் கொண்டாட்டம் என்பதுபோல்... ரணில் விக்கிரமசிங்கவை - புலிகளிடமிருந்து எப்படி பிரிக்கலாம், அவர்களுக்கிடையில் எப்போது விரிசல் வரும் என்று காத்திருந்தீர்கள்.

வந்தது விரிசலல்ல... அது ஒரு இருப்பெடுப்பு... ஐரோப்பிய நாடாளுமன்ற உறுப்பினர் சொன்னது போல், அது ஒரு நல்ல சூழல். இதுவரை நடைபெற்ற விடயங்களைச் சரி, பிழை பார்க்கும் ஒரு இருப்பெடுப்பு அது.

அதனை உங்களுக்குச் சார்பாக உங்கள் ஊடகங்கள் மூலமும், இனவாத ஊடகங்கள் மூலமும் ஏதோ சமாதான முயற்சிகள் முறிந்து விட்டது, இனிமேல் சண்டைதான் என்ற வதந்தியைப் பரப்பினீர்கள். அரசாங்கம் - உங்களின் பிரசாரத் தாக்குதலை சமாளிப்பதா, அல்லது விடுதலைப் புலிகளைச் சமாளிப்பதா என்று திகைத்துப்போய் நிற்கையில், நீங்கள் வீசிய அபிவிருத்தி லொத்தர்சபைப் பந்தில் ரணில் ரன் அவுட் ஆனார்.

ஆனால், என்ன துணிவில் நீங்கள் இப்படியான ஒரு அதிரடி நடவடிக்கை எடுத்தீர்கள் என்று ஆராய்நதால் - பின்னணியில் தெரிவது மக்களின் ஆதரவு அல்ல, ஜே.வி.பியின் ஆதரவு என்பது தெளிவாகின்றது.

உங்களின் அரசியல் அதிரடிக்காகப் பாராட்டினாலும், உங்களுக்காக அனுதாபப்படவேண்டியும் உள்ளது. ஏனென்றால், சேரக்கூடாத இடத்தில் சேர்ந்திருக்கின்றீர்கள்.

'எந்தச் சாத்தானோடும் சேரத் தயார்' என்று முன்னாள் ஜனாதிபதி மறைந்த ஜே.ஆர்.ஜெயவர்த்தனா அன்று தெரிவித்திருந்தார். இப்போது அதேகூற்றை நீங்கள் சொல்லியிருக்கின்றீர்கள். அவர் சொன்னது விடுதலைப் புலிகளை அழிப்பதற்காக இஸரேல் போன்ற சாத்தானுடனும் சேரத் தயார் என்று. ஆனால் நீங்கள் சொல்லியிருப்பது ஜே.வி.பி என்ற சாத்தானை.

பன்றியோடு சேர்ந்த பசுக்கன்றும் மலம் தின்னும், பூவோடு சேர்ந்த நாரும் மணக்கும் என்று இரு பழமொழிகள் தமிழில் உண்டு. அதேபோல் ஜே.வி.பிச் சாத்தானோடு சேர்ந்த சந்திரிகா சுடலை போவாரோ அல்லது சந்திரிகாவுடன் சேர்ந்த சாத்தான் நாடாளுமன்றம் செல்லுமோ என்பது இனிமேல்தான் தெரியும்.

நீங்கள் இருவரும் செய்துள்ள கூட்டு யாருக்கு லாபம் என்பதை வரலாறு காட்டும். இருந்தபோதும், இப்படியான ஒரு முடிவுக்கு நீங்கள் வரக்காரணம் என்ன?

நீங்கள் சேர்ந்துள்ளவர்கள் யார் என்று தெரிந்துதான் சேர்ந்துள்ளீர்களா என்பதே தற்போது அரசியல் அவதானிகளிடம் எழுந்துள்ள கேள்வி. உங்கள் கூட்டைப் பார்த்து சர்வதேச சமூகமே மூக்கில் விரலை வைத்துள்ளது. தொடர்ந்தும் அந்த விரலை மூக்கில் இருந்து அவர்களால் எடுக்க முடியாது. ஏனென்றால், இனிமேல் உங்கள் அரசியல் அவ்வளவுக்கு நாறப்போகின்றது.

1971 ஆம் ஆண்டு உங்களால்- சுதந்திரக் கட்சியால் கொல்லப்பட்டு அடக்கப்பட்டவர்கள்தான் இந்த ஜே.வி.பியினர். 1989 ஆம் ஆண்டில் இந்த ஜே.வி.பியினரின் பெயரைச் சொல்லித்தான் உங்கள் கணவர் கொல்லப்பட்டார். இரு வருடங்களுக்குமுன் உங்கள் அரசு பெரும் பொருட்செலவில் கொழும்பில் ஒரு கண்காட்சி நடத்தியிருந்தது. ஜே.வி.பியினர் 1980 களில் எவ்வாறு மக்களை படுகொலை செய்தனர். எவ்வாறு பயங்கரவாதிகளாக நடந்தனர். அவர்கள் ஜனநாயகவாதிகள் அல்ல. அவர்கள் பயங்கரவாதிகள் என்று மக்களுக்குக் காட்ட நீங்கள் நடத்திய கண்காட்சிதான் அது. அந்த கட்சியை நீங்கள் பயங்கரவாதிகள் என்று முத்திரை குத்துகின்றீர்கள். ஆனால், அவர்களுடன் சேர்ந்து கூட்டாட்சி அமைக்க முனைந்துள்ளீர்கள்.

தனக்கு மூக்கு போனாலும், சத்துருவுக்கு சகுனப்பிழையாக இருக்கவேணும் என்ற ரீதியில் - ஐக்கிய தேசிய கட்சியைத் தோற்கடிக்க நீங்கள் சேற்றில் இறங்கியிருக்கிறீர்கள்.



நீங்கள் இன்று, நேற்று ஜே.வி.பி யுடன் பேச்சு நடத்தியவரல்ல. கடந்த ஆட்சியில் - எதிர்கட்சியினர் உங்களின் மீது நம்பிக்கையில்லாப் பிரேரணை கொண்டுவரத் தீர்மானித்தபோதே அதை ஆரம்பித்துவிட்டீர்கள் என்பது எல்லோருக்கும் தெரியும்.

அப்போது ஜே.வி.பிக்குத் தேவையாக இருந்தது நோர்வேயின் சமாதானப் பேச்சை, நிறுத்துவது, விடுதலைப் புலிகளுடன் பேசுவதை தடுப்பது. அதற்காகவே நீங்கள் நோர்வேயின் சிறப்பு பிரதிநிதி எரிக் சொல்ஹெய்மைப் புலிகளின் ஆதரவாளர் என்று கூசாமல் கூறி, விரட்டிவிட்டீர்கள். ஆயுபோவான் சொன்னவாயாலேயே அழிஞ்சுபோவன் என்று சொல்லி அந்த நல்ல மனிசனைக் கலைத்து விட்டீர்கள். சந்தனம் பூசிய கையாலேயே, சகதியை வாரி இறைத்தீர்கள். இப்போதுதான் புரிகிறது ஜே.வி.பியினருக்கு நாய் வேஷம் போடுவதற்காக எரிக் சொல்ஹெம்மை பார்த்து குரைத்தீர்களென்று. ஜே. வி.பியினரின் பத்து எம்.பிமாரைப் பெறலாம் என்ற துணிவிலேயே நீங்கள் ரவூப் ஹக்கீமை தூக்கி எறிந்தீர்கள்.

அதன் பின் ஜே.வி.பியினருக்குத் தெரிந்துவிட்டது நீங்கள் எப்படியும் தங்களிடம் வந்தே தீருவீர்கள் எனறு. அதனாலேயே, ஜே.வி.பியினர் போடக்கூடாத நிபந்தனைகளை எல்லாம் போட்டார்கள், கேட்கக்கூடாத கோரிக்கைகளை எல்லாம் முன் வைத்தார்கள். சேரக்கூடாத இடத்தில் சேரத் தலைப்பட்டதால்- உங்கள் கஷ்டகாலம் எல்லாவற்றுக்கும் தலையாட்ட வேண்டிய நிலை.

கடந்த மே தினத்தில் லண்டனில் இருந்து ஜே.வி.பியின் தலைவர் சோமவன்ச அனுப்பிய அறிக்கை - ஜே.வி.பியின் மேடையில் வாசிக்கப்பட்டது. அதில் சமாதானப் பேச்சுக்கள் நிறுத்தப்படவேண்டும் என்று நீங்கள் ஒத்துக்கொண்டால் மட்டுமே உங்களுடன் கூட்டு என்று அவர் தெரிவித்திருந்தார்.

இப்போது விடுதலைப் புலிகளுடன் பேசக்கூடாது என்று வெளிப்படையாக நிபந்தனை விதித்த ஜே.வி.பியுடன் சேர்ந்துவிட்டீர்கள். புலிகளுடன் பேசக்கூடாது என்ற கோரிக்கையுடன் உங்களுடன் சேர்ந்துள்ள ஜே.வி.பியிடம், குரங்காட்டியின் கோலை கொடுத்துள்ளீர்கள். இனி ஜே.வி.பியினர் ஆட்டுவிக்கும் வகையில் ஆடப்போகின்றீர்கள்.

பட்டுச்சேலை இரவல் கொடுத்தவள் - கட்டியவள் போகும் இடமெல்லாம் அதனைத் தூக்கிப்பிடித்தபடி செல்வது போல்தான் இனி உங்கள் நிலை - ஜே.வி.பியினருக்கு வால் பிடிப்பதாக இருக்கும்.

இதில் நீங்கள் எச்சரிக்கையாக இருக்கவேண்டிய விடயம் ஒன்றுண்டு.

இன்றும் அவர்களின் செயற்குழு எங்கே கூடுகின்றது. அதில் யார் அங்கத்தவர்களாக இருக்கின்றனர் என்பது எவருக்குமே தெரியாது. கட்சியின் தலைவர் தலைமறைவாகியிருக்கின்றார். அவர்களின் தலைவர் சோமவன்ச இன்னமும் அகப்படாமல் லண்டனில் இருந்து கொண்டே கட்சியை நடத்துகின்றார்.

ஏற்கனவே நீங்கள் - உங்கள் ஆட்சியில் இராணுவத்திற்குக் கண்டபடி ஆள்திரட்டி பயிற்சியளித்தில் ஆயிரக்கணக்கில் ஜே.வி.பியினருக்கு ஆயுதப் பயிறசி இலவசமாக அளித்துள்ளீர்கள் என்பதைப் புரியாமல் இருக்கிறீர்களா? படையை விட்டு ஓடிய ஆயிரக்கணக்கான சிப்பாய்கள், ஏன் உங்களிடம் இலவசமாக இராணுவப் பயிற்சி எடுத்துவிட்டு ஓடிய ஜே.வி.பியினராக இருக்கக் கூடாது?

கவனம் குரங்கு கையில் கொள்ளியையும் கொடுத்து, அதன் கையில் கோலையும் கொடுத்துள்ளீர்கள். அன்று வந்த அனுமான் இத் தீவைத்தான் தீ வைத்தான். இனி மேல் இந்த குரங்குகள்... ஜே.வி.பியினர்...

இத் தீ விடுதலைப் புலிகளை விட, தமிழர்களைவிட - உங்களைத்தான் அதிகம் சுடும் என்பதை மறந்து விடாதீர்கள்.

யாரும் தலையைச் சொறிவதற்கு கொள்ளிக்கட்டையைக் கையில் எடுப்பதில்லை... நீங்கள் எடுத்துவிட்டீர்கள்...

**இப்படிக்கு,**

**- வாசகன் ரட்ணதுரை.**

# அபிவிருத்தி திட்டங்களுக்கான நிதி அமைச்சர்களின் சட்டைப் பைக்குள்!

## குற்றஞ்சாட்டுகிறார் சரத் அமுனுகம

பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவின் அரசாங்கம், ஊழல் நிறைந்தது என்றே கடந்த ஒரு வருடமாகக்கூறி வருகின்றோம். நாம் ஆட்சியை அமைப்பது நிச்சயம். எமது அரசு அமைக்கப்பட்டவுடன் ஊழல் நிறைந்தவர்கள் நாட்டைவிட்டு வெளியேறுவதைத் தடுக்க மூன்று நாட்களுக்கு கட்டுநாயக்க விமான நிலையம் மூடப்படும் என்று பொதுஜன ஐக்கிய முன்னணியின் பேச்சாளர் கலாநிதி சரத் அமுனுகம தெரிவித்தார்.

எதர்க்கட்சித் தலைவரின் அலுவலகத்தில் நேற்றுமுன் தினம் இடம்பெற்ற செய்தியாளர் மாநாட்டில் உரையாற்றிய போதே, அவர் இவ்வாறு குறிப்பிட்டார். அவர் அங்கு தொடர்ந்து உரையாற்றுகையில் -

அபிவிருத்தித் திட்டங்களுக்கு ஒதுக்கப்படும் நிதி, அமைச்சர்களின் சட்டைப் பைக்குள்தான் செல்கின்றன. இதனை இலங்கைக்கு நிதி வழங்கும் நாடுகள் அறிந்திருக்க வேண்டும்.

கொழும்புத் துறைமுகத்திலுள்ள எண்ணெய்த் தாங்கியைக் கொள்வனவு செய்ய ஒரு நிறுவனம் 11 மில்லியன் அமெரிக்க டொலரை வழங்க முன்வந்துள்ளது. ஆனால், இரண்டு மில்லியன் அமெரிக்க டொலர்களுக்கு இந்தத் தாங்கியை விற்பதற்கு அமைச்சர் ஒருவர் தீர்மானித்துள்ளார் என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

# புலிகளின் கோரிக்கை நிறைவேற்றத்தில் தங்கியிருக்கும் ரணில் அரசின் இருப்பு!

## தெற்குத் திசையினிலே.....

### கொழும்பிலிருந்து இந்திரஜித்

கடந்த வாரம் இயற்கை அனர்த்தம் காரணமாக இலங்கையின் அரசியல் முழுவதும் அந்த இயற்கை அனர்த்தத்துடன், இரண்டறக் கலந்துவிட்டது எனலாம். இரத்தினபுரி, காலி, மாத்தறை மற்றும் களுத்துறையிலும் ஏற்பட்டுள்ள வெள்ள, மண்சரிவு அனர்த்தங்கள் ஐநூறுக்கு மேற்பட்டோரைக் காவுகொண்டுவிட்டது எனத் தெரிவிக்கப்படுகிறது. இதற்குத் அரசாங்கத்தைக் குறைகூற முடியாதநிலை ஏற்பட்டுள்ளது.

சாதாரணமாக இவ்வாறான இயற்கை



இடைக்கால நிர்வாகம் தொடர்பான விடுதலைப் புலிகளின் நிலைப்பாட்டை செய்தியாளர் மாநாட்டில் அறிவிக்கும் சு.ப.தமிழ்ச்செல்வன்.

அனர்த்தங்களின்போது ஏற்படுகின்ற ஆபத்துக்களை முன்கூட்டியே அறிவிக்கவில்லை, ஆற்றுப்பகுதிகளில் உரிய பராமரிப்பின்மையே வெள்ளத்துக்கான காரணம், அதனை அரசாங்கம் முறையாகச் செய்யவில்லை என்றெல்லாம் குற்றம் கூறப்படுவது வழக்கம். ஆனால், இந்தமுறை இலங்கையில் ஏற்பட்ட இயற்கை அனர்த்தங்கள் எவரும் எதிர்பார்க்காத பேரழிவுகளை ஏற்படுத்திச் சென்றிருக்கிறது.

1947ஆம் ஆண்டுக்குப் பின்னர் ஏற்பட்ட இந்த அழிவு, சுமார் அரை மணித்தியாலத்திற்குள் ஏற்பட்டதாகும். இரத்தினபுரியில் பெய்த கடும்மழை அங்கு பிற்பகல் ஒரு மணியளவில் வெள்ளப்பெருக்கை ஏற்படுத்தியது. பல நகரங்கள் வெள்ளத்தில் மூழ்கின. சுமார் 1.30 மணியளவில் நகரங்களின் வீடுகள் யாவும் நீரினால் சூழப்பட்டன. தம்மைக் காப்பாற்றிக்கொள்வதற்கு மக்கள் பாதுகாப்பான இடங்களுக்குச் செல்வதற்குக்கூடச் சந்தர்ப்பம் இருக்கவில்லை. மக்கள் சிறு குழந்தைகளுடனும், முதியவர்களுடன் கூரைகளின் மீது ஏறத்தொடங்கினர். கொட்டும் மழையிலும் இந்த அவலம் தொடர்ந்தது. கடும் மழை நின்றுவிடும், வெள்ளம் வற்றிவிடும் என்ற நம்பிக்கையிலேயே மக்கள் கூரையின் மீது ஏறினர். எனினும், அவர்களின் விதி சாவு என்ற இறுதிக்கட்டத்துக்குக் கொண்டுசென்றது.

இலங்கையில் பதவிக்கு வருகின்ற அரசாங்கங்கள் அனைத்துமே இவ்வாறான நிலைமையைச் சமாளிக்கும் வகையிலான திட்டங்களை முன்னொருபோதிலும் கொண்டிருக்கவில்லை என்ற உண்மை இந்த அனர்த்தத்தின்போதே வெளிப்பட்டது. வெள்ளம் சூழ்ந்த இடங்களுக்கு அவசரமாகச் சென்று மக்களைக் காப்பாற்றுவதற்குக்கூட உரியவசதிகள் இல்லாமல், அரசாங்கத்தின் இராணுவத்தினர் சுமார் பதினைந்து மணித்தியாலங்களுக்குப் பின்னரே அங்கு சென்றனர். இது இவ்வாறு இருக்க, இயற்கை அழிவுகளையடுத்து இடம்பெற்ற சில விடயங்கள் இலங்கை மக்கள் மத்தியில் மீண்டும் ஒற்றுமை உணர்வை ஏற்படுத்திவிட்டது.

பாதிக்கப்பட்ட மக்களுக்கு அனைத்துத் தரப்பு மக்களும் இனபேதமின்றி உதவிகளை வழங்கியமை இதில் குறிப்பிடத்தக்கது. இயற்கைச் சீற்றத்தினால் துன்புறும் மக்களுக்கு உதவுவதற்காக வடபகுதியில் சேகரிக்கப்பட்ட உணவுப்பொருட்களுடன் தென்னிலங்கைக்கு வருகைதந்த தமிழீழ விடுதலைப் புலிகள் - தென்னிலங்கை மக்கள் மத்தியில் குறிப்பாகச் சிங்கள மக்கள் மத்தியில் நன்மதிப்பைப் பெற்றுள்ளனர்.

தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு எதிரான கருத்துக்களைக் கூறிக்கொண்டிருந்த சிங்கள ஊடகங்களும் மெய்மறந்து தமிழீழ விடுதலைப் புலிகளின் உதவிகளைப் பாராட்டியுள்ளன. தமிழீழ விடுதலைப் புலிகளின் நடவடிக்கைகளை ஒவ்வொரு அசைவிலும் குறைகாணும் மக்கள் விடுதலை முன்னணி மற்றும் சிஹல உறுமய என்பன இந்த விடயத்தில் தோற்றுப்போய்விட்டன. இதனால், ஜனாதிபதிக்குக்கூட தர்மசங்கடமானநிலை ஏற்பட்டுவிட்டது.

இயற்கை அனர்த்தங்களுக்கு மத்தியில் இலங்கை அரசியலின் சாதகமின்மைப் போக்குத் தொடர்கிறது. நாட்டின் பொருளாதாரத்தைக் கட்டியெழுப்ப உறுதிபூண்டுள்ள ஐக்கிய தேசிய கட்சி அரசாங்கமும், அதனை நிறைவேற்றிக் கொள்வதில் தர்மசங்கடமான நிலையை அனுபவித்து வருகிறது. ரோக்கியோ உதவிவழங்கும் நாடுகளின் கூட்டத்தில் பெருமளவு நிதி கிடைக்கும், அதனைக் கொண்டு இலங்கையின் பொருளாதாரத்தைக் கட்டியெழுப்பும் அதேநேரம், தமது ஆட்சியையும் நிலைநிறுத்திக் கொள்ளலாம் என அரசாங்கம் எண்ணம் கொண்டிருக்கிறது.

எனினும், அந்த எண்ணம் நிறைவேறும் வரையில் அதற்கு முன்னால் பாரிய சவால்கள் ஏற்பட்டிருக்கின்றன. ஜப்பான் மாநாட்டில் கிடைக்கும் நிதியுதவிகள்- போரினால் நலிந்து போயிருக்கும் தென்னிலங்கையின் ஒட்டுமொத்த பொருளதாரத்தைக் கட்டியெழுப்பப் பயன்படுத்தப்படும் அதேநேரம், போரினால் அழிந்துபோயிருக்கும் வடக்கு - கிழக்குப் பகுதிகளுக்கு உரியமுறையில் பயன்படுத்தப்படுமா என்ற சந்தேகம் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு ஏற்பட்டது இயல்பானதே. ஏனெனில், இலங்கையின் அரசாங்கங்கள் ஏற்கனவே பல தடவைகள் பல்வேறு விடயங்களில் இவ்வாறான சந்தேகம் ஏற்படுவதற்கான வாய்ப்புக்கள் தமிழர்களுக்கும் மற்றும் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் ஏற்படுத்தியிருந்தன என்பதை மறைக்கமுடியாது.

இவ்வாறான அனுபவங்களின் அடிப்படையில் எழுப்பப்பட்டிருக்கும் தமிழீழ விடுதலைப் புலிகளின் கோரிக்கைகள், உண்மையில் சிங்களத் தலைமைகளைச் சிந்திக்கவைத்துள்ளன. வெறும் வாய்வீச்சுக்களுடன் நின்றுகொண்டிருக்கும் ஜனாதிபதியின் பொதுஜன ஐக்கிய முன்னணி, மக்கள் விடுதலை முன்னணி மற்றும் சிஹல உறுமய என்பன தமிழீழ விடுதலைப் புலிகளின் கோரிக்கைகள் தொடர்பில் உடனடியாகக் கருத்துக் கூறமுடியாதநிலைக்கு சென்றுள்ளனர்.

வடக்கு - கிழக்குப் பகுதிகளுக்கான அபிவிருத்தியை முன்கொண்டு செல்ல, உரிய அதிகாரம் கொண்ட அமைப்பு ஒன்று ஏற்படுத்தப்பட வேண்டும் என்ற தமிழீழ விடுதலைப் புலிகளின் கோரிக்கையை எவராலும் நிராகரிக்க முடியவில்லை. என்றாலும், பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவின் அரசாங்கம் தமது இயல்பான காலந்தாழ்த்தும் நடவடிக்கைகளை இதிலும் மேற்கொண்டுவருகிறது. 'சிறான்' செயலகத்தை முறையாகச் செயற்படுத்தியிருந்தால், அரசாங்கத்திற்கு இந்த நிலைமை ஏற்பட்டிருக்காது.

ஆனால், அரசாங்கம் இழுத்தடிப்புக்களை மேற்கொண்டு, எப்படியாவது ரோக்கியோ மாநாட்டை நடத்திவிடவேண்டும் எனக் கொணடிருந்த எண்ணம் கைநழுவிப் போயிருக்கிறது. அதேநேரம், சர்வதேச அழுத்தங்களைப் பயன்படுத்தி - தமிழீழ விடுதலைப் புலிகளை வழிக்குக் கொண்டுவந்து விடலாம் என அரசாங்கம் போட்டிருந்த திட்டமும் செயலிழந்து போயுள்ளது.

இலங்கை அரசாங்கத்திற்குத் தற்சமயம் அமெரிக்கா, ஜப்பான் போன்ற நாடுகள் பக்கபலமாக இருந்துவருகின்றன. எனினும், இந்த நாடுகள் இலங்கையில் ஆதிக்கத்தைச் செலுத்த முடியாத அளவிற்கு இந்தியாவும் தமது செயற்பாடுகளை மேற்கொண்டுவருகிறது. இதற்கு மத்தியில் வொஷிங்ரனில் நடைபெற்ற உதவிவழங்கும் நாடுகளின் முன்னோடி மாநாட்டில் தமிழீழ விடுதலைப் புலிகளை பங்கேற்க அரசாங்கம் எந்தவொரு முன்னெடுப்பையும் மேற்கொள்ளவில்லை என்பதே தமிழீழ விடுதலைப் புலிகள் தற்சமயம் எடுத்துள்ள தீர்மானத்திற்கான காரணமாகும்.

வொஷிங்ரன் மாநாட்டில் தமிழீழ விடுதலைப் புலிகளைப் பங்குகொள்ளச்செய்ய வேண்டிய முழுமைப் பொறுப்பும் அரசாங்கத்திற்கு இருந்தது. ஆனால், அதனைச் செய்யவில்லை. அமெரிக்க அரசாங்கம் - இலங்கையில் பல நலன்களை எதிர்பார்த்தே உதவிகளைச் செய்து வருகிறது. அப்படியானால், இலங்கையும் தமது நாட்டின் நலன்கருதி அமெரிக்க மாநாட்டில் தமிழீழ விடுதலைப் புலிகளின் பங்கேற்பை உறுதிசெய்திருக்கலாம்.

அமைச்சர் மிலிந்த மொறகொட உதவி வழங்கும் வொஷிங்ரன் மாநாட்டில் பங்கேற்ற வேளையில், போர்க் கப்பல் ஒன்றைக் கொள்வனவுசெய்ய மேற்கொண்ட முயற்சியும் தமிழீழ விடுதலைப் புலிகளைத் தீவிரமாகச் சிந்திக்க வைத்துவிட்டது. இந்த விடயங்கள் உண்மையில் பாரதூரமானவை என ஐக்கிய தேசியக் கட்சியுடன் மிகநெருங்கிய தமிழர் ஒருவர் சுட்டிக்காட்டியபோது, அதனைப் பிரதமரும், அமைச்சர் மிலிந்த மொறகொடவும் ஏற்றுக்கொண்டதாகக் கூறப்படுகிறது.

'காலம் கடந்த பின்னர் ஞானம் பிறப்பதில் எவ்வித பயனுமில்லை' இந்த நிலையில், தமது நாட்டின் பொருளாதாரத் தாழ்வைச் சரிசெய்து கொடுப்பதற்காக ஜப்பான் அரசாங்கம் ரோக்கியோ மாநாட்டை நடத்திவிட வேண்டும் என்ற அவசரத்தில் செயற்பட்டுக் கொண்டிருக்கிறது. இறுதியாக அந்த நாடு விடுத்துள்ள வேண்டுகோளில் - எதிர்வரும் ஜூன் மாதம் 9 ஆம், 10 ஆம் திகதிகளில் ரோக்கியோவில் நடைபெறவிருக்கும் நிதி மாநாட்டில் பங்குகொள்வதை உறுதிசெய்து கொள்ளும்முகமாகத் தமிழீழ விடுதலைப் புலிகளும், அரசாங்கமும் இணக்கம் ஒன்றுக்கு வரவேண்டும் எனக் கேட்டுள்ளது.

இதற்கு மத்தியில் தமிழீழ விடுதலைப் புலிகள் முன்வைத்திருக்கும் வடக்கு - கிழக்கு நிர்வாகசபை கோரிக்கை, தென்னிலங்கை அரசியலில் மீண்டும் விமர்சனங்களை உருவாக்கியுள்ளது. ஐக்கிய தேசிய முன்னணி அரசாங்கம் ஆட்சிக்கு வந்தபோது - இந்த இடைககால நிர்வாகசபை யோசனையை முன்வைத்திருந்தது. அதனை ஏற்றுக்கொண்ட தென்னிலங்கை மக்களே, அந்தக் கட்சியை அரசாங்கமாகச் செயற்பட அங்கீகாரம் வழங்கினர்.

அதேநேரம், இலங்கையின் தற்போதைய அரசியலமைப்புக்குள் இந்த இடைக்கால நிர்வாக சபையை அமைக்கமுடியாது என்பதால், அதற்குப் புறம்பாகவே அதனை அமைக்க வேண்டும் எனத் தமிழீழ விடுதலைப் புலிகள் கேட்டுள்ளனர். இந்த இடைக்கால நிர்வாக சபை - தமிழீழ விடுதலைப் புலிகளைப் பொறுத்தவரையிலோ அல்லது அரசாங்கத்தைப் பொறுத்தவரையிலோ புதிய விடயம் அல்ல. ஏற்கனவே கூறப்பட்டு வந்த விடயங்களே. ஆனால், ரோக்கியோ மாநாட்டை நடத்திவிட வேண்டும் என அரசாங்கம் அவசரப்பட்டு கொண்டிருக்கும்போது, இந்தக் கோரிக்கை விடுக்கப்பட்டமையே அதிகளவில் தாக்கம் நிறைநத அம்சமாகக் கருதப்படுகிறது.

தமிழீழ விடுதலைப் புலிகளின் கோரிக்கை அடங்கிய கடிதம் பிரதம மந்திரிக்குக் கிடைத்த வேளையில் - அலரி மாளிகையில் அமைச்சர் நூர்தின் மசூரும் இருந்தார். அஷ்ரப் காங்கிரசின் கோரிக்கை தொடர்பில் அவர் பேச்சு நடத்தச் சென்றிருந்த வேளையிலேயே இந்தக் கடிதம் பிரதம மந்திரிக்குக் கிடைத்திருக்கிறது. இதன்போது கடிதத்தைப் பிரித்து பார்த்த பிரதமர், வடக்கு - கிழக்கு இடைக்கால நிர்வாகசபை என்ற விடயம் ஏற்கனவே உறுதிப்படுத்தப்பட்ட விடயம்தானே. அதில் பிரச்சினைகள் இருக்கமாட்டாது எனக் குறிப்பிட்டதாக அமைசசர் நூர்தின் மசூர் தெரிவித்துள்ளார்.

இந்தநிலையில் வடக்கு - கிழக்கு இடைக்கால நிர்வாக சபை விடயத்தில் பொதுஜன ஐக்கிய முன்னணி, மீண்டும் ஒருமுறை ஜனாதிபதியின் அதிகாரத்தை ஞாபகமூட்டும் பிரசாரத்தை மேற்கொண்டுள்ளது. அரசியலமைப்பின்கீழ் இடைக்கால நிாவாகசபையை அமைப்பதற்குப் பிரதம மந்திரிக்கு அதிகாரம் இல்லை. அதனை ஜனாதிபதியினால் மாத்திரமே அமைக்கமுடியும். அதனை மறுத்து பிரதம மந்திரி ஏதாவது முனைப்புக்களை மேற்கொண்டால், ஜனாதிபதி தமது அதிகாரங்களைப் பயன்படுத்த நேரிடும் எனவும் பொதுஜன ஐக்கிய முன்னணி தெரிவித்துள்ளது. தமிழீழ விடுதலைப் புலிகளின் கோரிக்கைகள் நிறை வேற்றப்படுவதற்கு முன்னர், அவர்கள் தமது ஆயுதங்களைக் களைவதற்கான உறுதிமொழி பெறப்படவேண்டும் எனவும் பொதுஜன ஐக்கிய முன்னணி குறிப்பிட்டுள்ளது.

முஸ்லிம் மக்களின் ஆதரவைப் பெற்றுக் கொள்ளும் நோக்கில், வடக்கு - கிழக்கு இடைக்கால நிர்வாகசபை அமைக்கப்பட்டால், அங்கு முஸ்லிம்களின்நிலை பாதிக்கப்படும் எனப் பொதுஜன ஐக்கிய முன்னணி அச்சமூட்டும் பணியில் ஈடுபட்டுள்ளது. அதேநேரம் இவ்வாறான கருத்துக்களுக்கு மத்தியில் அடுத்தகட்ட நகர்வுக்குப் பிரதம மந்திரி தயாராகக்கொண்டிருக்கிறார்.

பொதுஜன ஐக்கிய முன்னணி உட்பட்ட எதிர்க்கட்சிகளின் பிரசாரங்களை முறியடித்து, தமிழீழ விடுதலைப் புலிகளின் கோரிக்கைகளை நிறைவேற்றும் போதே தமது ஆட்சி நிலைக்கும் என்ற உண்மையைப் பிரதம மந்திரி நன்கு உணர்ந்திருக்கிறார். எனவே, அதற்கான நகர்வுகள் மேற்கொள்ள வேண்டிய கட்டாயம் அவருக்கு ஏற்பட்டுள்ளது. ❖

---

## =வலி. வடக்கு மீள்குடியேற்றம்=

# பிரதமரின் பதிலைக் கோரும் யாழ். மாவட்ட அரச அதிபர்

1990 முதல் வலி.வடக்குப் பிரதேசத்தில் 28 கிராமசேவகர் பகுதியில் மக்கள் மீளக்குடியேற அனுமதிக்கப்படவில்லை. தெல்லிப்பளை சந்திவரை மட்டுமே குடியேறப் படையினர் அனுமதித்துள்ளனர் என யாழ். அரச அதிபர் பத்மநாதன் - பிரதமர் ரணிலுக்கு எழுதிய கடிதத்தில் தெரிவித்துள்ளார்.

கடந்த 20 ஆம் திகதி செயலகம் முன் நடந்த மறியற்போராட்டத்தின் முடிவில்- அரச அதிபரிடம் வழங்கப்பட்ட மகஜரைப் பிரதமருக்கு அனுப்பிவைத்துள்ள யாழ். அரச அதிபர், அதனுடன் இணைத்து நிலைமைகளை விளக்கி தாமும் ஒரு கடிதத்தை அனுப்பிவைத்துள்ளார். அக்கடிதத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது, வலி.வடக்கு மக்கள் தமது மீள்குடியேற்றம் குறித்து இம்மாத இறுதிக்குள் பதில் தராவிட்டால், செயலகம் முன் தொடர்மறியல் நடைபெறும் எனக் கூறியுள்ளனர். இதனால, அரசின் பதிலை எதிர்பார்ப்பதாகவும் அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## உதைபந்தாட்ட இறுதி சுற்றுப்போட்டி

யாழ் உதைபந்தாட்ட லீக் நடாத்தும் 22 வயதுக்குட்பட்டோருக்கான உதைப்பந்தாட்ட இறுதிச்சுற்றுப் போட்டியும், பரிசளிப்பு விழாவும் இன்று பி.ப. 4.30 மணிக்கு உரும்பிராய் இந்துக் கல்லூரி மைதானத்தில் நடைபெறவுள்ளது.

இதில் உதைபந்தாட்ட லீக்கின் உப தலைவர் ஜேக்கப் பிரதம விருந்தினராகக் கலந்துகொள்ளவுள்ளார்.

## கட்டாக்காலிகளால் அழிப்பு

யாழ்.வலயக் கல்வித் திணைக்களப் பராமரிப்பில் நடப்பட்டிருக்கும் மரங்கள் கட்டாக்காலி ஆடு, மாடுகள் தினமும் அழித்து வருவதாகத் தெரியவருகிறது. (110)

# போரினால் பாதிக்கப்பட்ட பெண்கள்குழு அடுத்த மாதம் யாழ்ப்பாணம் வருகிறது


(யாழ்ப்பாணம்)

போரினால் பாதிக்கப்பட்ட பெண்கள் சங்கத்தைச் சேர்ந்த குழு ஒனறு எதிர்வரும் 13 ஆம் திகதி யாழ் குடாநாட்டிற்கு வருகைதரவுள்ளது.

இக்குழுவுடன் தென்பகுதி பத்திரிகையாளர் குழுவினரும் வருகைதரவுள்ளனர். இக்குழுவினர் யாழ்ப்பாணத்தில் பெண்களுக்கு யுத்தத்தால் ஏற்பட்டுள்ள பாதிப்புகள் தொடர்பாக ஆராய்வதுடன், தமிழ்-சிங்கள உறவைக் கட்டிவளர்ப்பது பற்றியும், எதிர்காலத்தில் போரினால் பாதிக்கப்பட்ட பெண்களின் சவால்களை எப்படி சமாளிப்பது என்பது பற்றியும் ஆராயவுள்ளனர்.

இதைவிட வடபகுதியில் கைது செய்யப்பட்டுக் காணாமற்போனோர் சங்கப் பிரதிநிதிகளையும் இவர்கள் சந்திக்கவுள்ளனர். 13 ஆம் திகதி இரவு 7.30 மணிக்குச் சுண்டிக்குளியில் உள்ள சைனிஸ் கோட்டலில் உள்ளூர் பத்திரிகையாளர் மற்றும் தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்களை இவர்கள் சந்திக்கவுள்ளனர். 14 ஆம் ,15 ஆம் திகதிகளில் பண்டத்தரிப்பில் "றறரா இல்லத்தில்" மாநாடுகளையும் நடத்த உள்ளனர்.

# ஈராக்கின் ஐ.நா. பிரதிநிதியாக மனித உரிமைக்குழு தலைவர்!



ஈராக்கிற்கான, ஐ.நாசபையின் விசேட பிரதிநிதியாக, ஐ.நா. சபையின் மனிதஉரிமைகள் ஆணைக் குழுவின் உயர்ஸ்தானிகர், சேர் ஜியோ வேய்ரா டீ மேலோ என்ற பிரேஸில் நாட்டவர் நியமிக்கப்பட்டுள்ளார். ஈராக்கில் அமெரிக்கத் தலைமையிலான நிர்வாகத்திற்கு, ஐ.நா அங்கீகரித்த சில மணிநேரத்தில், இவரின் நியமனத்தை ஐ.நா. செயலர் கோபி அனான் வெளியிட்டார். ஐ.நா. மனித உரிமைத் தலைவராக, கடந்த ஆண்டில் பதவியேற்ற 55 வயதான இவர், விரைவில் ஈராக் செல்லவுள்ளார். எனினும், இவரின் பணி அங்கு மட்டுப்படுத்தப்பட்ட அளவில்தான் இருக்குமென எதிர்பார்க்கப்படுகின்றது.

# அல்ஜீரியப் பூகம்பப் பேரழிவு; மீட்புப்பணிகள் தாமதமாகிறது!


மீட்கப்பட்ட ஒருவயதுக் குழந்தை

அல்ஜீரிய பூகம்பத்தினால், பிரதான வீதிகளும் பாதிகக்ப்பட்டுள்ளதால், பூகம்பத்தால் அழிந்துள்ள அல்ஜீரியப் பகுதிகளுக்கு, மீட்புப்படைகளும், கனரக வாகனங்களும், உறவினர்களும் செல்வது தாமதமடைந்து வருகின்றது. இப்பூகம்பத்தினால் இதுவரை 1600 பேர் இறந்துள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

உலகநாடுகள் பல உதவிவழங்க முன்வந்தபோதிலும் - உதவிப் பொருட்களும், மீட்புப்பணியாளர்களும் சம்பவ இடத்திற்கு உடடியாகச் செல்லமுடியாது, அல்ஜியஸ் விமானநிலையத்தில் 10 மணிநேரம் தாமதிக்கவேண்டி ஏற்பட்டது.

இடிபாடுகளில் சிக்கி, இன்னமும் உயிருடன் உள்ள மக்களை கண்டுபிடிக்கும் வெப்ப உணர்கருவிகள் மற்றும் மோப்ப நாய்கள் அல்ஜீரியாவை வந்தடைந்துள்ளன.

# இந்தோனேஷிய அரச படைகள் அசே கிராமங்களில் அட்டகாசம்

இந்தோனேஷியாவின் அசே மாநிலத்தில், மீண்டும் வெடித்த போரில் சிக்கி, அசே மக்கள் கடும் இன்னல்களை அனுபவிக்கின்றனர். கிராமம் கிராமமாக, அசே போராளிகளைத் தேடும் இந்தோனேஷிய இராணுவத்தினர் - மக்களை கடுமையாகத் தாக்கிவருவதாகத் தெரிவிக்கப்படுகிறது. கிராமம் ஒன்றில், 11 பொதுமக்கள் படையினரால் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளனர்.

அசே மாகாண உணவுக் கையிருப்பு மோசமாக உள்ள நிலையில், பிரதான வீதிகளில் நிறுத்தப்பட்டுள்ள இந்தோனேஷியப் படைகள், ஒரு சில உணவு வாகனங்களை மட்டுமே அசே மாகாணத்தினுள் நுழைய அனுமதித்துள்ளனர். உணவு, சுகாதாரப் பிரச்சினைகளால் பெருமளவு மக்கள்- குறிப்பாக, அசே குழந்தைகள் பாதிக்கப்பட்டுள்ளதாக ஐ.நா தெரிவித்துள்ளது.

கிராமங்களில் இருந்து இளைஞர்கள் தப்பியோடிவிட்ட நிலையில்- எஞ்சியுள்ளவர்களை, இந்தோனேஷியப்படைகள் மிருகத்தனமாகத் தாக்கி வருகின்றனர். உறக்கத்தில் இருக்கும் கிராமத்தவர்களையும், இரவில் திடீரென எழுப்பி, போராளிகள் எங்கே எனப் படைகள் விசாரிப்பதாக, கிராமத்தவர் ஒருவர் தெரிவித்தார்.

தற்போது கிராமங்களில் உள்ளோர், கணக்கிடப்பட்டு அவர்களுக்கு அடையாள அட்டைகளை



யும் இந்தோனேஷியப் படையினர் விநியோகித்து வருகின்றனர். போராளிகள் - மக்களின் பழைய அடையாள அட்டைகளைப் உபயோகிப்பதால், புதிய அடையாள அட்டைகளை வழங்க இந்தோனேஷிய பாதுகாப்பு அமைச்சு முடிவு செய்துள்ளது.

இதுவரை, 58 போராளிகளைக் கொன்றுள்ளதாகவும் - உள்ளூர் போராளித் தலைவர் ஒருவரைக் கைது செய்துள்ளதாகவும் - கெரிலாக்களின் கட்டுப்பாட்டிலிருக்கும், நாசி என்ற சிறிய தீவில் வைத்து இவர் கைதானதாகவும் இந்தோனேஷியா தெரிவித்துள்ளது.

உலகவலம்

## சீனர்களைப் பிரிட்டனுக்குள் கடத்தியோர் மீது விசாரணை!

சட்டவிரோதமாக, பிரிட்டனுக்குள் 60 சீனர்களைக் கொண்டுவந்ததாகக் குற்றஞ்சாட்டப்பட்ட 8 சந்தேக சீன நபர்கள் மீதான விசாரணைகள் ஆரம்பமாகியுள்ளன. நெதர்லாந்து மற்றும் பெல்ஜியமூடாக, இந்தச் சீனர்கள் பிரிட்டனுக்குள் கொண்டு வரப்பட்டனர்.

இவர்கள் லொறி ஒன்றினுள் மறைத்து வைத்துக் கடத்திவந்தபோது, மூச்சுத்திணறலில் 58 சீனர்கள் லொறிக்குள் பலியானது குறிப்பிடத்தக்கது. சடலங்களுடன் கூடிய இந்த லொறி 2000 ஆம் ஆண்டு பிரிட்டனின் டென்வர் துறைமுகத்தில் மீட்கப்பட்டது. நால்வர் மீது கொலைக் குற்றச்சாட்டு சுமத்தப்பட்டுள்ளது.

# அமெரிக்க - பிரான்ஸ் முறுகல் தொடர்கிறது!


பவல் - விலிபின் சந்திப்பு

ஈராக் போர் தொடர்பாக, கருத்து முரண்பட்டுக் கொண்ட அமெரிக்காவும் பிரான்சும் தமது முரண்பாட்டை, தற்போது ஆரம்பித்துள்ள ஜி-8 மாநாட்டிலும் தொடர்கின்றது.

பிரான்ஸ் - தற்போது மத்திய கிழக்கு அமைதியின்மைக்கு, அரபாத்துடன் தொடர்புகொள்ள வேண்டும் என வலியுறுத்தும்வேளையில்- அமெரிக்கா - அரபாத்துடனான தொடர்புகள் பயனற்றது எனக் கூறி வருகிறது.

ஜி-8 மாநாட்டிற்காக, பெல்ஜியம் சென்றுள்ள அமெரிக்க அமைச்சர் கொலின் பவலுக்கும், பிரான்ஸ் வெளியுறவு அமைச்சர் விலிபினுக்கும் இடையில், 45 நிமிடநேர தனிப்பட்ட பேச்சுக்கள் நடைபெற்றுள்ளன.

# செவ்வாய் நோக்கி 'எக்ஸ்பிரஸ்'; எரிபொருள் நிரப்பும் நிலையில்!


எக்ஸ்பிரஸின் மாதிரித் தோற்றம்

இன்னும் ஒரு வாரத்தினுள் செவ்வாய் கிரகம் நோக்கி புறப்படவுள்ள ஐரோப்பாவின் 'மார்ஸ் எக்ஸ்பிரஸ்' எனும் விண்கலத்திற்கு எரிபொருள் நிரப்பும் பணிகள் ஆரம்பித்துள்ளன.

இந்த விண்கலம் - ஒரு பிரதான இயந்திரத்தையும், 8 சிறிய கட்டுப்பாட்டு உந்து கருவிகளையும் கொண்டுள்ளது.

இவற்றுக்கான எரிபொருளுக்கு இரண்டு உயர் நச்சுத் தன்மையான இரசாயனப் பதார்த்தங்களைக் கலக்கவேண்டியுள்ளதாகவும் -

இவற்றுக்கென தனியாக அமைக்கப்பட்டுள்ள இரண்டு எரிபொருள் கொள்கலன்களில், இவற்றைப் பாதுகாப்பாக நிரப்பும் ஆபத்தான பணி தற்போது ஆரம்பித்துள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

# 'சார்ஸ்' தடுப்பில் தாய்வான் தீவிரம்

'சார்ஸ்' நோய் - தமது நாட்டில் பரவுவதைத் தடுக்க, தகுந்த முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை ஆரம்பித்துள்ளதாகத் தாய்வான் அதிகாரிகள் அறிவித்துள்ளனர். தாய்வானில், மேலும் புதிதாக 55 'சார்ஸ்' நோயாளிகள் இனங்காணப்பட்டதாக வெளியான செய்திகளைத் தொடர்ந்தே, இந்த அறிவிப்பு வெளியாகியுள்ளது.

சீனா, ஹொங்கொங் ஆகிய நாடுகளையடுத்து, உலகில் அதிக 'சார்ஸ்' தாக்கத்திற்குள்ளான நாடாக, தாய்வான் உள்ளது. இதேவேளை, 'சார்ஸ்' கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரப்பட்டதையடுத்து, சீனப்பகுதிக்கான தனது விமானப் பரப்பு கட்டுப்பாட்டு எச்சரிக்கையை, உலக சுகாதார ஸ்தாபனம் கடந்த வெள்ளியன்று வாபஸ் பெற்றது.

# ஈரலுக்குள் இருந்து பிறந்த குழந்தை; தென்னாபிரிக்காவில் அதிசய பிரசவம்!

கருப்பைக்குப் பதிலாக - ஈரலினுள் விருத்தியடைந்த குழந்தையொன்று பிரசவமாகி உள்ளது. தென்னாபிரிக்காவில் பிறந்த இந்த அபூர்வக் குழந்தைக்கு, 'நஹ்லஹ்லா' என சூலு மொழியிலான பெயர் இடப்பட்டுள்ளது. அதிர்ஷ்டம் என்பது இதன் அர்த்தமாகும்.

உலகம் முழுவதிலும் இத்தகைய 14 குழந்தைகளே இதுவரை பிறந்துள்ளதாக, பதிவுசெய்யப்பட்ட பிறப்புப் பட்டியல்களில் இருந்து தெரியவந்துள்ளது. இவற்றில், 10 குழந்தைகள் உடனடியாக இறந்துவிட்டன.

நஹ்லஹ்லா - கடந்த வியாழனன்று, கடுமையான ஒரு அறுவை சிகிச்சையின் பின்னர், வைத்திய நிபுணர்களால் வெளியே எடுக்கப்பட்டது. நிறைகுறைந்ததாக அதாவது, 2.8 கிலோ நிறையுடன் பிரசவமாகிய இப்பெண் குழந்தை, சுகமாக இருப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இக்குழந்தையை பிரசவித்த 20 வயதான தாயாருக்கு, முதல் பிரசவம் சாதாரணமானதாகவே இருந்தது. இது ஒரு அதிசயக் குழந்தை என்கிறார் - இப்பிரசவத்துக்கு உதவிய டாக்டரும், ஈரல் சிகிச்சை நிபுணருமான பேராசிரியர் ஜக் கிறிக்.

சாதாரணமாக கருக்கட்டப்பட்ட மனித முட்டை பலோப்பியன் குழாயூடாக பயணித்து, கருப்பையை வந்தடைந்து - அதில் தங்கியே தொடர்ந்து வளர்ச்சியடையும். சில சமயங்களில், பலோப்பியன் குழாயினுள்ளேயே கருக்கட்டிய முட்டை விருத்தியடைவதுமுண்டு. ஆனால், இவற்றில் லட்சத்தில் ஒருவருக்கு, பலோப்பியனிலிருந்து வெளிவந்துவிடும் கருக்கட்டிய முட்டை, வயிற்றின் எப்பகுதியிலாவது


தாயுடன் நஹ்லஹ்லா


தங்கி வளரும் ஏதுநிலை உண்டு. மிக அரிதாகவே, அதிக இரத்த விநியோகமுடைய ஈரலுக்குள் முட்டை சென்று வளரும். குழந்தையைச் சுற்றிய பாதுகாப்பு கவசம் காணப்பட்டாலும், கருப்பையில் உள்ள விசேட பாதுகாப்பு, சாதாரண வயிற்று உறுப்புக்களில் காணப்படமாட்டாது என்பதால்- எந்நேரமும் இத்தகைய வளரும் முளையங்கள் ஆபத்தை எதிர்நோக்கியபடியே இருக்கவேண்டும். இத்தகைய குழந்தைகள் - சில வாரங்களில் இறந்துவிடும் சந்தர்ப்பமே அதிகம். ஆனால், உலகில் இவ்வாறு அதிசயமாக பிழைத்த நான்காவது பெண் குழந்தையாக, நஹ்லஹ்லா உள்ளாள்.

ஸ்கானிங் மூலமே, இக்குழந்தை ஈரலில் இருந்து வளர்வதை டாக்டர்கள் கண்டறிந்துள்ளனர். பிரசவத்துக்கு ஒருவாரம் இருந்தபோதிலும், தாயின் கருப்பை வெறுமையாக இருந்ததால் எழுந்த சந்தேகத்தினால், டாக்டர்கள் ஸ்கானிங்கிற்கு உத்தரவிட்டனர்.

சத்திரசிகிச்சையை, கடந்த வியாழன் காலை ஆரம்பித்தபோதே, குழந்தை ஈரலில் வளர்வது தெரிந்தது என்கிறார் கேப்டவுனில் உள்ள ஸ்கூஹ்ர் வைத்தியசாலையின் டாக்டர் புரூஸ் ஹெவார்ட்.

அறுவை சிகிச்சையின் போது - ஈரலின் வெளிப்புறத்தில், குழந்தையை சுற்றிப்பாதுகாப்பாக இருந்த அமீனியன் பை தொடர்பு கொண்டிருந்த இடத்தில், சிறிய துவாரம் ஒன்று காணப்பட்டது. இதனூடாக, குழந்தையை வெளியெடுத்தோம். அமீனியன் பையையும், தாயின் விநியோகத்தைக் குழந்தை பெற்றுவந்த கொடிப்பகுதியையும் அகற்றாமல், அப்படியே விட்டுவிட்டோம். ஏனெனில், இவற்றை அகற்ற எடுக்கும் முயற்சி, ஏற்கனவே ஆபத்துநிலையில் உள்ள தாயை மேலும் மோசமடையச் செய்யலாம் என்பதாலாகும். அகற்றப்படாத இவை, காலப்போக்கில் தாயின் உடலால் இயற்கையாகவே அகத்துறிஞ்சப்பட்டுவிடும் என, சத்திரசிகிச்சையை மேற்கொண்ட டாக்டர்கள் தெரிவித்துள்ளனர். இத்தகைய பிரசவங்கள், மிக ஆபத்தானவை. 200 பெண்களில் ஒருவர், இத்தகைய நிலையில் சிகிச்சை ஆரம்பிக்க முன்பே இறந்துவிடுகின்றனர். குழந்தையும், தாயும் இங்கே உயிர்தப்பியிருப்பது மிக அதிசயம் என்கிறார் பேராசிரியர் ஜேம்ஸ் வோக்கர்.

நமது ஈழநாடு
The Namathu Eezhanadu
The Leading Daily of Tamils' Homeland



களுத்துறையில் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட அகதிகளுக்கு படகுகளில் சென்று விடுதலைப் புலிகள், உணவுப் பொட்டலங்களை வழங்கும் காட்சியைப் படத்தில் காணலாம்.

# கண்டி வீதி மிதிவெடிகள் அகற்றப்பட்டதும் தென்மராட்சிக்கு முழுஅளவில் மின்சாரம்!

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்திலிருந்து சாவகச்சேரி வரையிலான கண்டி வீதியில், தற்போது மிதிவெடிகளை அகற்றும் செயற்பாடு நடப்பதனாலேயே, தென்மராட்சிக்கான 24 மணிநேர மின் விநியோகத்தை வழங்குவதில் தாமதம் ஏற்பட்டுள்ளது என, சாவகச்சேரி மின்சார நிலையப் பொறுப்பதிகாரி தெரிவித்துள்ளார்.

மிதிவெடி அகற்றப்பட்டதும் மின் விநியோகம் ஆரம்பிக்கப்படும் எனவும், தென்மராட்சிக்கான மின்சார விநியோகம் சீரானதும் - பரந்தன் சந்திவரையான விநியோகத்திற்கான நடவடிக்கையை ஆரம்பிக்கத் திட்டமிட்டுள்ளதாகவும் அவர் மேலும் கூறினார். (36)

## நோர்வே லொத்தர் இலங்கையில் அறிமுகம்!

இணையத்தளத்தின் ஊடாக புதிய லொத்தர் முறையொன்றை இலங்கையில் முதன்முறையாக ஆரம்பிப்பதற்கான உடன்படிக்கையில், தேசிய லொத்தர் சபையும் - நோர்வே அரசாங்க நிறுவனம் ஒன்றும் நேற்றுக் கைச்சாத்திட்டன.

இந்த லொத்தர் முறையை இலங்கையில் அறிமுகம் செய்வதுடன், விற்பனை செய்வதிலும் நோர்வேயின் நோசிபிள் நிறுவனம் ஈடுபடவுள்ளது.

# இராணுவக் கேணல் வீடு மீது கொழும்பில் கைக்குண்டு வீச்சு!

புறக்கோட்டையில் உள்ள இராணுவ கேணல் ஒருவரின் வீட்டின் மீது, இளைஞன் ஒருவர் கிரனேட் தாக்குதல் நடத்தியதில், மூவர் காயமடைந்தனர்.

மேற்படி தாக்குதல் நடத்திய இளைஞன் இதுதொடர்பாகப் பொலிஸாருக்கு அளித்த வாக்குமூலத்தில்,

இராணுவ கேணலின் மகளைத் திருமணம் செய்து, தாங்கள் தம்பதிகளாக முல்லேரியாவில் வசித்து வந்ததாகவும், சக படையினருடன் வந்த கேணல் தனது மனைவியைக் கூட்டிக்கொண்டு சென்றுவிட்டதாகவும் குறிப்பிட்டார்.

தனது மனைவியான கேணலின் மகளைத் தேடி, புறக்கோட்டையில் உள்ள வீட்டுக்குச் சென்றபோது - கேணல் இருக்கவில்லை. கேணலின் மனைவி, வீட்டைவிட்டு மகளை அனுப்பமுடியாதென மறுத்துவிட்டார்.

இதனால், அந்த இளைஞன் 'திருமணச் சான்றிதழை உனது தாய்க்குக் காட்டு' என்று தனது மனைவியிடம் கூற, வீட்டுக்கு காவல் இருந்த இராணுவச் சிப்பாய், அவரைத் தள்ளி வெளியே துரத்தினார்.

இதனால், முரண்பாடு ஏற்படவே, மறைத்து வைத்திருந்த கிரனேட்டை எடுத்து இளைஞன் வீசியதில் - கேணலின் மனைவி, அவரது மகள் மற்றும் வீட்டுக்கு காவல் இருந்த இராணுவச் சிப்பாய் ஆகியோர் காயமடைந்தனர்.

இவர்கள் தற்போது களுபோவில வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

## இடைக்கால...

ஏற்பட்டால், அதைச் செய்யத் தயங்கமாட்டேன்.

நோர்வேயை இணுசரணையாளராகத்தான், நான் அழைத்துவந்தேன். மத்தியஸ்தராக அழைக்கவில்லை. இப்போது, நோர்வே - மத்தியஸ்தராக மட்டுமன்றி, மேலாதிக்கம் செலுத்துகின்ற ஒரு நிலையிலும் இருக்கிறது.

எந்தவொரு வெளிநாட்டு மத்தியஸ்தராவது- ஒருநாட்டின் கடற்படையோடு, இன்னொரு கடற்படையையும் அங்கீகரிக்குமாறு கேட்பார்களா? ஆனால், நோர்வே நாட்டவர்கள் அவ்வாறு கேட்டார்கள்.

ஜப்பான் அரசு - புலிகள் எப்படியாவது ரோக்கியோ மாநாட்டுக்கு வரவேண்டும் என்பதற்காகப் பெரும் முயற்சிகளைச் செய்கிறது. ஆனால், இந்தச் சமாதான முயற்சிகளில் ஜப்பான் எந்தப் பாத்திரத்தை வகிக்கிறது என்பது எனக்குத் தெரியாது.

வடக்கு - கிழக்குப் பகுதிகளில், அபிவிருத்தி நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு அரசாங்கமே உரித்துடையது என்பதை நான் உறுதியாகக் கூறுகிறேன் என்றும் ஜனாதிபதி மேலும் தெரிவித்துள்ளார்.

# சைக்கிளில் வந்த பெண் பஸ் மோதியதில் மரணம்!

## ஆஸ்பத்திரி வீதியில் சம்பவம்

(யாழ்ப்பாணம்)

சைக்கிளில் வந்துகொண்டிருந்த பெண்ணொருவர், பஸ் வண்டியுடன் விபத்துக்குள்ளானதில் பரிதாபகரமாக மரணமடைந்தார்.

நேற்று நண்பகல், யாழ். ஆஸ்பத்திரி வீதியில் நடைபெற்ற இந்தச் சம்பவத்தில், அரியாலை கனகரத்தினம் வீதியைச் சேர்ந்த நடராஜா கேசவராணி (வயது 45) என்ற பெண்ணே மரணமடைந்தவராவார்.

யாழ். நகரை நோக்கி சைக்கிளில் வந்துகொண்டிருந்தவேளை, எதிரே வந்த பஸ்ஸுடன் இவர் விபத்துக்குள்ளானதில் படுகாயமடைந்து, வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிலமணி நேரத்தின் பின்னர் இப்பெண் மரணமடைந்தார். (ச)

# தமது மூன்று வேளை உணவை அகதிகளுக்கு வழங்கிய கைதிகள்

(கொழும்பு)

இயற்கை அனர்த்தங்களினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு, களுத்துறைச் சிறையிலுள்ள தமிழ் அரசியற் கைதிகள், தமது மூன்றுவேளை உணவை வழங்கியுள்ளனர்.

களுத்துறை மாவட்டத்தில் - வெள்ளபபெருக்கு, மண்சரிவினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு - கடந்த 21, 22, 23 ஆம் திகதிகளில் தமது மூன்றுவேளை உணவை நிறுத்தி, அதனைக் களுத்துறை தமிழ் அரசியற் கைதிகள் வழங்கினர்.

களுத்துறைச் சிறையில் தற்போது உள்ள 60 கைதிகளே இந்த மனிதாபிமான உதவியைச் செய்துள்ளனர்.

தமிழ் அரசியற்கைதிகள், தாம் உணவுப்பொருட்கள் வழங்கியது தொடர்பாக - உள்துறை அமைச்சர், சிறைச்சாலை ஆணையாளர் ஆகியோருக்கும் அறிவித்துள்ளனர். (01)

## புலிகளிடம் இடைக்கால....

பத்திரிகையாளரைச் சந்தித்தபோதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

தற்போது அமைதி முயற்சிகள் இடைநிறுத்தி வைக்கப்பட்டதையிட்டு, நாம் மிகவும் கவலையடைந்துள்ளோம். இதனை நாங்கள் முழுமையாக அங்கீகரிக்கவுமில்லை, எதிர்க்கவுமில்லை. இந்த சந்தர்ப்பத்தில் அரசு - விடுதலைப் புலிகள் ஆகிய இருதரப்பினரும் நிதானமாகவும், தந்திரோபாய அடிப்படையிலும் சிந்தித்துச் செயற்படவேண்டும்.

இதுவரை நடைபெற்ற பேச்சுவார்த்தைகளின்போது, மேற்கொள்ளப்பட்ட உடன்பாடுகள் பூரணமாக நடைமுறைப்படுத்தப்படாமையினாலேயே, தற்போது சமாதானப் பேச்சுவார்த்தைகள் இடைநிறுத்தப்படவேண்டியேற்பட்டுள்ளது. இதே போன்று, சந்திரிகா அரசின் காலத்... பிக்கை ஏற்படக்கூடிய வகையில் சமூகப் புனரமைப்பு நடவடிக்கைகளை முறையாக மேற்கொள்வதற்காகவே புலிகள் இந்தக் கோரிக்கையை விடுத்துள்ளதாக அவர் கூறினார்.

வடக்கு - கிழக்கில் இவ்வாறு ஒரு நிர்வாகக் கட்டமைப்பு ஏற்படுத்தப்படுவது, அரசியல் சாசனத்துக்கு உட்பட்டதா என்று தர்க்கம் புரிவது வீண்செயலென்றும் கலாநிதி விக்கிரமபாகு கருணாரத்ன தெரிவித்துள்ளார்.

புலிகள் மாத்திரமல்ல - பொது ஜன ஐக்கிய முன்னணியின் தலைவர்களும், வடக்கு - கிழக்கில் அகதிகளை மீளக்குடியமர்த்தும் நடவடிக்கை வெற்றிபெறவில்லை என்றும், அந்தப் பிரதேசங்களில் சமூக சேவை நடவடிக்கைகள் முறையாக

## வொஷிங்ரனை விட ரோக்கியோ...

பல்கலைக்கழகம், அரச செயலகம், மனிதநேய அமைப்புகள், மனித உரிமைகள் ஆணைக்குழு ஆகியவற்றின் பிரதிநிதிகளைச் சந்தித்து வூல்டர் கலந்துரையாடியுள்ளார்.

நேற்று நடைபெற்ற செய்தியாளர் மாநாட்டில் அவர் தொடர்ந்தும் பேசுகையில் -

ஐரோப்பிய ஒன்றியமானது - கடந்த பல ஆண்டுகளாக மனிதாபிமான உதவிகளை யாழ். குடாநாட்டுக்கு ஆற்றிவந்திருக்கின்றது.

குறிப்பாக- உள்ளூரில் இடம்பெயர்ந்த மக்களை மீளக்குடியமர்த்து... பெயர்ந்த 3,80,000 மக்களுக்கும், 240,000 சாதாரண மக்களுக்கும் கண்ணிவெடி தொடர்பான அறிவூட்டலை யுனிசெப் அமைப்புடன் இணைந்து, ஐரோப்பிய யூனியன் செயற்படுத்தவுள்ளது. குடாநாட்டில் 60000 மக்களுக்கு உலக உணவு ஸ்தாபனத்துடன் இணைந்து விவசாயத்துக்கு வேண்டிய கருவிகள், வளமாக்கிகளையும் இவ்வாண்டு நாம் வழங்கவுள்ளோம்.

குடாநாட்டில் சொந்தமாகக் காணிகளை வைத்திருக்கின்ற 300 குடும்பங்களுக்கு- அவர்களது வரு... நடவடிக்கைக்காக ஐரோப்பிய யூனியன் கையளிக்கவுள்ளது. தற்போது ஏழு பாடசாலைகளின் புனரமைப்பு வேலைகள் பூர்த்தியடைந்து - அவை, கற்பித்தல் செயற்பாட்டை மீள ஆரம்பிக்கக்கூடிய நிலையில் இருக்கின்றன. மேலும் 15 பாடசாலைகள் எதிர்வரும் ஜூன் மாதமளவில் மீளக்கற்பித்தல் நடவடிக்கைகளுக்காக சம்பந்தப்பட்ட திணைக்களத்திடம் கையளிக்கப்படும் என அவர் தெரிவித்தார்.

இவ்வருடம் ஏ-9 பாதையிலுள்ள தடை முகாம்களில், மின்சார வசதி

தித்துச் செயற்படவேண்டும்.

இதுவரை நடைபெற்ற பேச்சுவார்த்தைகளின்போது, மேற்கொள்ளப்பட்ட உடன்பாடுகள் பூரணமாக நடைமுறைப்படுத்தப்படாமையினாலேயே, தற்போது சமாதானப் பேச்சுவார்த்தைகள் இடைநிறுத்தப்படவேண்டியேற்பட்டுள்ளது. இதே போன்று, சந்திரிகா அரசின் காலத்தில் நடாத்தப்பட்ட பேச்சுக்களின் போதும், உடன்பாடு காணப்பட்ட விடயங்கள் நடைமுறைப்படுத்தப்படவில்லை.

விடுதலைப் புலிகளுக்கு என்று ஒரு கட்டுப்பாட்டுப் பிரதேசம் உண்டு என்றும், அதை நிர்வகிக்கின்ற உரிமை விடுதலைப் புலிகளுக்கு உண்டென்றும் சந்திரிகா அரசாங்கம் அன்று ஏற்றுக்கொள்ளவில்லை. ஆனால், இன்று ரணில் அரசாங்கம் இதை ஏற்றுக்கொண்டுள்ளது என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

இதேவேளை, அரசியல் சாசனத்துக்குப் புறம்பாக, வடக்கு - கிழக்கிற்கான இடைக்கால நிர்வாக சபை ஒன்றை, தமிழீழ விடுதலைப் புலிகள கோருகின்றமை நியாயமானது என்று- கொழும்பில், புதிய இடதுசாரி முன்னணியின் தலைவர் விக்கிரமபாகு கருணாரத்ன நேற்று கருத்துத் தெரிவித்துள்ளார்.

வடக்கு - கிழக்கில் தமக்கு நம்நிதி விக்கிரமபாகு கருணாரத்ன தெரிவித்துள்ளார்.

புலிகள் மாத்திரமல்ல - பொது ஜன ஐக்கிய முன்னணியின் தலைவர்களும், வடக்கு - கிழக்கில் அகதிகளை மீளக்குடியமர்த்தும் நடவடிக்கை வெற்றிபெறவில்லை என்றும், அந்தப் பிரதேசங்களில் சமூக சேவை நடவடிக்கைகள் முறையாக மேற்கொள்ளப்படவில்லை என்றும் வெளிப்படையாகவே கூறுவதாகவும் அவர் குறிப்பிட்டார்.

வடக்கு - கிழக்கில் இவ்வாறான நிர்வாகக் கட்டமைப்பொன்றை ஏற்படுத்துவது அரசியல் சாசனத்துக்கு உட்பட்டதா என்று தர்க்கம் புரிவதிலும் பார்க்க, இதனால், வடக்கு - கிழக்கில் முறையான புனரமைப்பு நட்வடிக்கைகளை மேற்கொள்வதற்கே இடைக்கால நிர்வாகசபையை விடுதலைப் புலிகள் கோருகின்றனர் என நினைப்பது நியாயமானது என்றும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இன்று புலிகளோடு ஒப்பந்தம் ஒன்றை ஏற்படுத்தி, நிபந்தனைகளின்றி வட - கிழக்கில் மூன்றிலொரு பகுதி ஒப்படைக்கப்பட்டுள்ளது. இந்த நிலையில் வடக்கு- கிழக்கு மக்களுக்கு, சேவையாற்றக்கூடிய அமைப்பொன்றை ஏற்படுத்துவது அரசின் கடமையாகும் என்றும் விக்கிரமபாகு கருணாரத்ன தெரிவித்தார். (சு,க)

வூல்டர் கலந்துரையாடியுள்ளார்.

நேற்று நடைபெற்ற செய்தியாளர் மாநாட்டில் அவர் தொடர்ந்தும் பேசுகையில் -

ஐரோப்பிய ஒன்றியமானது - கடந்த பல ஆண்டுகளாக மனிதாபிமான உதவிகளை யாழ். குடாநாட்டுக்கு ஆற்றிவந்திருக்கின்றது.

குறிப்பாக- உள்ளூரில் இடம்பெயர்ந்த மக்களை மீளக்குடியமர்த்துவதிலும், கண்ணிவெடிகளை அகற்றுவதிலும், மிதிவெடி மற்றும் கண்ணிவெடி தொடர்பான அறிவூட்டல்களை வழங்குவதிலும் அது உதவியிருக்கிறது.

இடம்பெயர்ந்த மக்களின் வீட்டு வசதி, சுத்தமான குடிநீர், சுகாதாரமான முறையில் வாழ்க்கை முறைகளை அமைத்தல் போன்றவற்றிற்கு உதவி வழங்குவதுடன், அம்மக்களுக்கு மேற்படி விடயங்கள் தொடர்பாக விழிப்புணர்வூட்டும் வகையிலும் எமது நிறுவனம் உதவிவருகின்றது.

இவற்றைவிட, விவசாயத்தைப் பொறுத்தவரை - உணவுப்பாதுகாப்பு மற்றும் சுகாதாரம் தொடர்பான சம்பந்தப்பட்ட அமைப்புக்களுடன் நிறுவன ரீதியான உதவிகளையும் ஐரோப்பிய யூனியன் வழங்கி வருகின்றது.

இந்தவகையில், ஜுலை மாதம் தொடக்கம், உள்ளூரில் இடம்

இணைந்து, ஐரோப்பிய யூனியன் செயற்படுத்தவுள்ளது. குடாநாட்டில் 60000 மக்களுக்கு உலக உணவு ஸ்தாபனத்துடன் இணைந்து விவசாயத்துக்கு வேண்டிய கருவிகள், வளமாக்கிகளையும் இவ்வாண்டு நாம் வழங்கவுள்ளோம்.

குடாநாட்டில் சொந்தமாகக் காணிகளை வைத்திருக்கின்ற 300 குடும்பங்களுக்கு- அவர்களது வருவாயைப் பெருக்குவதற்கு, ஜேர்மனின் ஜீ.ரி.இசற் நிறுவனத்துடன் இணைந்தும் செயற்படவுள்ளோம்.

பிரான்சின் - பட்டினிக்கெதிரான நிறுவனத்துடன் இணைந்து, 5300 பயனாளிகளுக்கு வீட்டுத்தோட்ட உபகரணங்களையும், நல்லின, கலப்பற்ற விதைகளையும் வழங்கவுள்ளோம். இவ்வாறு, இடம்பெயர்ந்த குடாநாட்டு மக்களுக்கு மனிதாபிமான உதவிகளை ஐரோப்பிய யூனியன் எதிர்காலத்தில் ஆற்றவுள்ளதாக வூல்டர் மில்ரன் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், யாழ். குடாநாட்டில் படையினர் பயன்படுத்திய பாடசாலைகளை, மீண்டும் கல்விச் செயற்பாட்டிற்கு உட்படுத்தும் நோக்கமாக, பாடசாலைகளை ஜீ.ரி.இசற் நிறுவனத்துடன் இணைந்து, 0.6 மில்லியன் யூரோ டொலர்களை, 22 பாடசாலைகளுக்கு - மீளக் கற்பித்தல்

அவை, கற்பித்தல் செயற்பாட்டை மீள ஆரம்பிக்கக்கூடிய நிலையில் இருக்கின்றன. மேலும் 15 பாடசாலைகள் எதிர்வரும் ஜுன் மாதமளவில் மீளக்கற்பித்தல் நடவடிக்கைகளுக்காக சம்பந்தப்பட்ட திணைக்களத்திடம் கையளிக்கப்படும் என அவர் தெரிவித்தார்.

இவ்வருடம் ஏ-9 பாதையிலுள்ள தடை முகாம்களில், மின்சார வசதிகளை ஏற்படுத்தி, 24 மணி நேரமும் மக்களின் பாதுகாப்பான போக்குவரத்தினை உறுதிசெய்வதற்கும் ஐரோப்பிய யூனியன் திட்டமிட்டுள்ளது.

மேலும் மனித உரிமைகள் ஆணைக்குழுவுடன், எமது ஒன்றியம் இணைந்து - மனித உரிமைகள், சிறுவர்களினது உரிமைகள் தொடர்பான அறிவூட்டல்களை நிகழ்த்தவுள்ளது. யாழ்.குடாநாட்டில் தனியார் துறையினருடன் ஐரோப்பிய யூனியனின் தனியார் துறையையும் இணைத்து, குடாநாட்டின் பொருளாதார முயற்சிகளை ஐரோப்பிய யூனியன் அபிவிருத்தி செய்யவுள்ளது.

இந்தவகையில், நேற்று முந்தினம் யாழ்ப்பாணம் வர்த்தக சம்மேளனத்துடன் ஆக்கபூர்வமான கலந்துரையாடலில் தாம் ஈடுபட்டதாகவும் வூல்டர் தெரிவித்தார்.


வீட்டில் இருந்தே ஆங்கிலம் கற்று Diploma சான்றிதழ் ஒன்றைப் பெற நீங்கள் தயாரா?

தபால் மூலம் ஆங்கில பாடநெறி - SPOKEN ENGLISH BY POST

சரளமாக ஆங்கிலம் எழுத, பேச, வாசிக்க 90 நாட்களில் பயிற்சி அளிக்கப்படும்



ஏன் யோசிக்கிறீங்க?
உங்களாலும் ஆங்கிலத்தில் பேசமுடியும்!

இலவசம் - Free

பாடநெறியைத் தொடர விண்ணப்பிக்கும் அனைத்து மாணவர்களுக்கும் பின்வருவன இலவசமாக வழங்கப்படும்.

- ✡ ஆங்கில தமிழ் அகாரதி
- ✡ சிங்கள பயிற்சி பாடநெறி
- ✡ அழகிய Bag ஒன்று

மேலதிக விபரங்களை Telephone மூலம் பெற அழையுங்கள் 08-201433

மேலதிக விபரங்களை தபால் மூலம் பெற முகவரியுடன் நீள கடிதவுறையை அனுப்பவும்.

J.E.I. INSTITUTE, P. O. BOX . 119. KANDY


இப்பத்திரிகை இல. 267, நாவலர் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள நமது ஈழநாடு அச்சகத்தில் 25.05.2003 அன்று பொன்னுத்துரை குருதேவ் அவர்களால் அச்சிட்டு வெளியிடப்பட்டது.